# கோயில் பகிஷ்காரம் -ஏன்?

(ஆதாரங்களைக் கொண்ட ஓர் தொகுப்பு நூல்)

பெரியார் ஈ. வெ. ரா.
கி. வீரமணி, எம்.ஏ., பி.எல்.,

R 34
N72

பெரியார் சுயமரியாதைப் பிரசார நிறுவன
வெளியீடு, திருச்சி-17.

விலை: ] 1972 [60 காசுகள்.

186856.

முதற் பதிப்பு, ஜூன்—1972

விலை : 60 காசுகள்.

திராவிடன் அச்சகம், சென்னை-7.

# கோயில் பகிஷ்காரம்-ஏன்?

## பரிகாரப் பிரச்னை

இன்றுள்ள அரசியல் சட்டத்தினாலே, சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பினாலே நாம் நாதியற்றவர்களாக ஆக்கப்பட்டு இருக்கின்றோம். இதற்கு நாம் பரிகாரம் காணவேண்டும்.

அதற்காகவே மே 7-ம் தேதி சென்னையில் திராவிடர் கழக மாநில மாநாட்டினை கூட்டி, அதில் முடிவு செய்து, அதனை மக்கள் மத்தியில் நடைமுறைக்குக் கொண்டுவருவோம்.

### சாமி தலையில் நீரைத் தெளித்து

மக்களை எல்லாம் கோயிலுக்குள் நுழையச் செய்து, சாமி தலையில் தண்ணீர் ஊற்றி, தொட்டுக் கும்பிடச் செய்யலாமா என்று யோசித்தேன்.

அப்படிச் செய்தால், அத்துமீறி பிரவேசித்தார்கள் என்று அரசாங்கம் தடுக்கவும், நடவடிக்கை எடுக்கவும் வேண்டிவரும்.

### சுலபமான வழி

நமது அரசாங்கம் நம்மீது நடவடிக்கை எடுக்க மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் தயங்கினாலும், மத்திய அரசாங்கம் மாநில ஆட்சிமீது

நெருக்கடியை உண்டாக்கும். உடன்படவில்லை என்றால், இந்த ஆட்சியையே ஒழிக்க முயல்வார்கள்.

ஆட்சியைப் பாதுகாக்க வேண்டியவர்களாக உள்ள நாம், ஆட்சிக்கு இக்கட்டான நிலையை உண்டாக்கக் கூடாது.

எனவே, அடுத்தத் திட்டமாக நாம் மேற்கொள்ள வேண்டியது அதைவிட சுலபமான வழி ஒன்று உள்ளது.

## காலைப் பிடித்து கெஞ்சி, கொஞ்சி

தோழர்களே! நாம் எதற்காகக் கோயிலுக்குள் போகவேண்டும்? நம் மக்களை எல்லாம் காலைப் பிடித்துக் கெஞ்சி, நம்மை இழி மக்களாக, உரிமையற்றவர்களாக சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பு மூலம் நிலை நிறுத்தப்பட்டுவிட்டது. அங்கே போகாதீர்கள் என்று கேட்டுக்கொள்ளப் போகின்றோம்.

உங்களுக்குப் பக்தி இருந்தால், கோயிலுக்கு வெளியே இருந்து தேங்காய், பழங்களை கொண்டு சென்று, சாமியைக் கும்பிட்டுவிட்டு, தேங்காயை உடைத்து, இரண்டு மூடியையுமே நீங்களே எடுத்துக் கொண்டு வந்துவிடுங்கள்.

கோயிலுக்குள் சென்று தேங்காயை உடைத்தால், பார்ப்பானுக்கு ஒரு மூடி போய்விடும் அப்படி இல்லாமல் வெளியே உடைப்பதால், உங்களுக்கு லாபமும்கூட ஏற்படுகின்றதே.

## குழவிக் கல்லைக் கும்பிடும் கூத்து

கடவுளுக்கு இலக்கணம் கூறுகின்ற எல்லோரும் கடவுள் எங்கும் இருக்கின்றார்; எல்லாமாய் இருக்கின்றார்; அவருக்கு உருவம் இல்லை; அவருக்கு ஒன்றும் வேண்டாம். இப்படி அல்லவா கூறுகின்றார்கள்?

அப்படியிருக்க, கோயிலுக்குள் ஏன் குழவிக்கல்லை வைத்துச் சாமி என்று கும்பிடவேண்டும்? அதற்கு ஆறு கால பூசை எதற்கு? கலியாணம், பெண்டு பிள்ளைகள் ஏன்?

கடவுளுக்கு இலக்கணம் கூறியவன், கண்ணுக்குத் தெரியாது; கைக்குச் சிக்காது; மனத்துக்கும் புரியாது; நம்பு என்று சொன்னான்.

கிறிஸ்தவர்களும், முஸ்லீம்களும் இப்படித்தான் சொல்கின்றனர்.

'இந்து' என்ற இவன் மட்டும் உருவமே இல்லாத ஒன்றுக்கு இரண்டு தலை, 3 தலை, 4 தலை, 6 தலை, 4 கை, 6 கை, 12 கை என்று எதற்காகப் பண்ணிக் கோயிலுக்குள் அடைத்துவைக்கிறான்?

## கடவுளர்கள் பிறந்த காலம்

நாம் எத்தனை நாளைக்கு இப்படியே மடையர்களாக இருப்பது? தோழர்களே! இந்தக் கடவுள்கள் எல்லாம் எப்போது ஏற்பட்டது? 2500, 3000 ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்டவைகள்தானே?

அந்தக் காலம் என்பது காட்டுமிராண்டிகள் காலந்தானே? 3,000 ஆண்டுகளுக்கு முந்திய சங்கதிகளை எதை நாம் இன்று ஏற்றுக்கொண்டு இருக்கின்றோம்? எதை நடைமுறையில் பின்பற்றுகின்றோம்?

## கோவணாண்டி அன்று; டஜன் ஆடை இன்று

அன்று கோவணத்தோடு, ஒரு வேட்டியோடு இருந்து இருப்பான் இன்றைக்கு அரை டஜன் உருப்படி அல்லவா அணிந்துகொள்கின்றான்!

உடையில் மட்டும் அல்லவே, உணவிலும் எவ்வளவோ மாற்றங்களைச் செய்துகொண்டு இருக்கின்றோமே! மற்ற மற்ற சங்கதிகளிலும் பழசு எதைப் பின்பற்றுகின்றோம்?

## மறுப்பு ஏன் ?

கால்நடையில் போன மனிதன், பிறகு கார், ரயில், ஆகாய விமானம் என்று பயணம் செய்கின்றானே! மணிக்கு 4 மைல்கள் நடந்தவன், இன்று 400, 500 மைல்கள் பறக்கின்றானே.

கடவுள், மதம், சாஸ்திரம் முதலிய சங்கதிகளில் மட்டும் மாற்றிக்கொள்ள மறுப்பது ஏன் ?

இவ்வளவு விழிப்பான காலத்தில், விஞ்ஞான அதிசய அற்புதங்களை எல்லாம் கண்டுபிடிக்கக்கூடிய இந்தக் காலத்தில், மனிதன் சந்திர மண்டலத்துக்கே போய்விட்டு வருகின்ற காலத்தில் 2000, 3000 வருஷங்களுக்கு முன்னதாக ஏற்பட்டவைகளைக் கட்டிக் கொண்டு அழுவதா ?

## சாமி சாகுமென தீர்ப்பில் குறிப்பு

மக்கள் சிந்திக்கவேண்டும். நாம் கோயிலுக்குள் போனால், பூசை செய்தால் சாமி செத்துப் போகும், தீட்டுப்பட்டுப் போகும் என்கின்றான். நாமும் கேட்டுக் கொண்டு சும்மா இருப்பதா? மலையாள நாட்டில் வைக்கத்தில், கோயிலைச சுற்றியுள்ள ரோடுகளில்கூட தீண்டப்படாதார்கள்கூட அல்ல, நாடார்களே நடக்கக் கூடாது என்ற நிலை இருந்தது

நாங்கள் கிளர்ச்சி செய்த பிறகுதானே பரிகாரம் ஏற்பட்டது ?

கோயிலுக்குள், தமிழ்நாட்டிலேயே நாடார்கள் போகக்கூடாது என்று சமீப காலம்வரைக்கும் இருந்ததே அவைகள் எல்லாம் மாற்றப்படவில்லையா ?

## கட்டியணைக்கப் பண்டரிச் சாமி

இப்பவும் பிரசித்தமான கோயில்களான காசி, பண்டரிபுரம், ஜெகன்நாதம் முதலிய ஊர் கோயில்களில்

யார் வேண்டுமானாலும் சென்று, சாமியைத் தண்ணீர் ஊற்றி, பூ போட்டுத் தொட்டு வணங்கலாமே. பண்டரிபுரத்தில் சாமியைக் கட்டிக்கொண்டு அல்லவா கும்பிடுகின்றான். இன்னொருத்தன் கும்பிடவேண்டுமானால், அவனை இழுத்து விட்டுவிட்டு இவன் கட்டிக்கொண்டு கும்பிடுவான்.

இங்கே எல்லாம் பார்ப்பனர் அல்லாதவன் தொட்டால் செத்துப் போகாத சாமி, இங்கு மட்டும் செத்துப்போகும் என்றால் எவ்வளவு போக்கிரித்தனம் அது ?

**நாய் முத்தத்தில் நனைந்த சாமிகள்**

கர்ப்பகிரகத்துக்கு வெளியே உள்ள சாமிகளையும், நவக்கிரகங்களையும் எல்லோரும்தான் தொட்டுக் கும்பிடுகின்றார்கள்.

உள்ளே உள்ள சாமிக்குச் செய்வதுபோலத்தான் பூசை முதலியனவும் நடைபெறுகின்றது. ஆளில்லாத போது, நாய் முதலியனவும் அபிஷேகம் செய்த பொருள்களுக்காகச் சிலையை நக்குகின்றது. இதுகள் எல்லாமும் சாகாமல் இருக்கும்போது, கோயிலுக்குள் மட்டும் உள்ள சாமி எப்படிச் செத்துப் போகும்? மக்கள் எண்ணிப் பார்க்கவேண்டும்.

எனக்கென்ன வந்தது? நானோ, எங்களைச் சார்ந்தவர்களோ அர்ச்சகராக ஆகவேண்டும் என்றா ?

நமது சாதி இழிவு நீங்கவேண்டும் என்ற ஒரே காரணத்துக்குத்தானே கூறுகின்றேன்.

எனவே, மே மாதம் 7-ம் தேதி சென்னையில் நடைபெற இருக்கின்ற எங்கள் மாநில மாநாட்டிற்கு அனைவரும் ஆதரவுகொடுக்க வேண்டும்.

[5-4-'72 சென்னைக் கடற்கரையில் தந்தை பெரியார் அவர்கள் ஆற்றிய பேருரை.]

———

## இனி நமது கடமை என்ன ?

சமுதாயத் துறையில் நமக்கு உள்ள இழிநிலை அதாவது, இந்நாட்டுப் பழங்குடி மக்களாகிய நம்மை, மனித சமுதாயத்தில் 100-க்கு 97 பேராகிய நம்மை அந்நிய நாட்டார் என்று அவர்களாலேயே சரித்திரம் எழுதி வைத்துக்கொள்ளப்பட்டிருக்கும் ஒரு கூட்டத்தா ராகிய பார்ப்பனர் (நம்மை) நாலாம் ஜாதி, கடைஜாதி, இழிஜாதி, தீண்டப்படாத ஜாதி என்று ஒருபுறம் கூறிக் கொண்டும், அந்தப்படி சாஸ்திரம், மனுதர்மம், கடவுள் கட்டளை என்றும் சொல்லிக்கொண்டும், ஆதாரங்களை ஏற்படுத்திக்கொண்டும் இருப்பதுடன், மற்றொரு பக்கம் இந்த நாலாம் ஜாதி என்று சொல்லப்படும் மக்கள் தங்களுடைய தாசி—வைப்பாட்டி, காதல் கிழத்திகள் மக்கள் என்றும் கூறிக்கொண்டு, அதற்கு ஏற்றபடியும் சாஸ்திர தர்ம ஆதாரங்களையும் செய்துகொண்டும், அவைகளையே அரசுச் சட்டமாகவும் ஆக்கியதுடன், அதற்கு ஏற்றபடி அரசுகளையும் அமைத்துக்கொண்டு வாழ்ந்துவருகிறார்கள்; நடப்பிலும் நீண்டகாலமாக நடத்திக்கொண்டு வருகிறார்கள்.

இந்த நிலை, நடப்பு முதலியவைகளைப்பற்றி இந்த நாட்டில் சிந்திக்கவே ஆள் இல்லாமற்படி, இந்த நிலையை மதம் என்றும், கடவுள் கட்டளை என்றும், தர்மம் என்றும் ஆக்கி, மக்களை அழுத்தி வைத்து விட்டார்கள்.

### ஜனநாயக ஆட்சி என்பது பெயரளவில்தான்

இந்தக் கொடுமையான நிலையை மாற்ற நாம்தான் —அதாவது, சுயமரியாதை இயக்கத்தார், திராவிடர் கழகத்தார், திராவிட முன்னேற்றக் கழகத்தார் ஆகிய நாம்தான் சிந்தித்தும், மாற்ற முறைகள் கண்டும் கூடிய வரை முயற்சித்துச் சிறிது சிறிதாக ஓரளவு மாற்றியும் வருகிறோம். என்றாலும், நமது தலைமீது ஏறி

உட்கார்ந்துகொண்டிருக்கும் ஓர் அந்நிய ஆட்சியான மனுதர்மம்போல் தங்கள் ஆட்சிச் சட்டத்தை ஏற்படுத்திக்கொண்டு, ஜாதி முறையையும், அதனால் இருந்துவருகிற இழிவுகளையும், 'சட்டப்படி' சட்டத்தின் பேரால் கொடுங்கோலான முறையில் பாதுகாத்து வருகிறார்கள்.

அதாவது, பெயரளவில் தங்கள் ஆட்சியை ஜனநாயக ஆட்சி என்று சொல்லிக்கொண்டு, காரிய அளவில் எவன் தனது நாட்டிற்கு, சமுதாயத்திற்குச் சுதந்திரம், விடுதலை கேட்டாலும் அவன் ஏழு ஆண்டுக் கடினக் காவல்தண்டனைக்கும், அபராதத்துக்கும் ஆளாக்கப்படத்தக்கவனாவான் என்று ஆக்கிக்கொண்டிருக்கிறார்கள். இதை நம்மால் என்றென்றும் மாற்ற முடியாதபடி அரசியல் அமைப்பையும் செய்துகொண்டிருக்கிறார்கள்.

எந்தக் காரணத்தைக்கொண்டும் ஆட்சித் தலைவரது தயவில்லாமல், இஷ்டமில்லாமல் இந்த நிலையை மாற்றமுடியாதபடி ஆட்சி அமைப்பையும் செய்துகொண்டார்கள். எப்படி என்றால், பாராளுமன்றச் சபை மெம்பர்கள் சுமார் 500 பேர்களிருக்கிறார்கள். இந்த 500 பேர்களில் நம் (தமிழ்) நாட்டு அங்கத்தினர்கள் 39 பேர்களே ஆகும் இந்த 39 பேரும் ஒன்றுசேர முடியாதபடி மதப் பிரிவு, ஜாதிப் பிரிவு, சுயநலப் பிரிவு என்ன வேண்டுமானாலும் செய்து, பிரிவினாலும், கட்சியாலும் இப்படிப்பட்ட பல பிரிவுகளுக்கு ஆளாகியிருக்கிறார்கள். இதற்குமேல் நமது நிலையை வெளிப்படுத்த நான் ஆசைப்படவில்லை.

## எதிரியின் அரண்களை நான்தான் உடைக்கத் துணிந்தேன்

இப்படிப்பட்ட நிலையில், நமது "பிறவி" இழிவின் காரணமாக இந்த நம் நாட்டில் நமது முயற்சி ஏற்பட்ட காலம்வரை நாம் 100-க்கு 5 பேருக்குக்கூட கல்வி இல்லாதவர்களாகவும், ஆட்சி உத்தியோகங்களில்

100-க்கு 5 பேர்கள்கூட நம்மவர்கள் அடையமுடியாத நிலைமையிலும், அரசியல் கிளர்ச்சி என்பவைகளிலும் நாம் கைத் தூக்குவதைத் தவிர, நமது கருத்தைத் தெரிவிக்க யோக்கியதை அற்றவர்களாகவும் ஈஷ்ஷீ பட்டிருப்பது மாத்திரம் அல்லாமல், அதைப்பற்றிச் சிந்திக்கவும கூடாதவர்களாக ஆக்கப்பட்டு, அமுக்கப் பட்டுக் கிடந்தோம். இதைப்பற்றிச் சிந்தித்துக் கருத்தை வெளியில் எடுத்துக்கூறிப் பிரச்சாரம் துவக்க என்னால் தான் முடிந்ததே தவிர, இந்த நாட்டில் வேறு யாராலும் முடியவே இல்லை. என்னால் மாத்திரம் எப்படி முடிந்தது என்றால், எனது சாமர்த்தியம் ஒன்றும் கிடையாது. மற்று என்னவென்றால், எனது துணிவுதான். அந்தத் துணிவு என்னவென்றால், நமது எதிரிகள் நமது இந்த இழிநிலைக்குப் பாதுகாப்பாகச் செய்துகொண்டிருந்த மதில் சுவராகிய கடவுள், மதம், சாஸ்திரம் முதலிய பாதுகாப்பு அரணகளை நான்தான் துணிந்து உடைத்து எறியத் துணிந்தேன். அந்த ஒரு துணிவுதான் இத் துறையில் நாம் காணும் பல மாற்றங்களாகும். அதுவும் இதற்குப் பல தோழர்கள் ஆதரவு அளிக்க முன்வந்து, உற்சாகமூட்டி உதவிசெய்த காரணமேயாகும். என்றாலும், ஜாதியிலும், ஜாதி அமைப்புப்படி ஆதாரங்களிலும் யாரும் கைவைக்கக்கூடாது என்கின்ற ஆட்சியை ஒழித்தால் அல்லாது நாம் மனிதராக மானத்தோடு வாழமுடியாது; முடியவே முடியாது என்ற நிலை ஒருநாளில், ஓர் ஆண்டில் அல்லது சில ஆண்டுகளிலும்கூட இந்திய ஆட்சி என்பதை ஒழிக்கவும் முடியாது; அதிலிருந்து நம்மால் விடுதலை பெறவும் முடியாது. என்றாலும், அதை இலட்சியமாகக் கொண்டு மக்களைச் சிந்திக்கச் செய்யலாம். அதனால் நம் இழிநிலை எளிதில் ஒழிக்கப்பட்டுவிடுமா? முடியாது.

**தீர்ப்பை ஏற்று நாம் ஈனப்பிறவியாக மடிவதா ?**

ஆதலால், தற்கால சாந்தியாகச் சுருக்கமான வழி காணவேண்டியது அவசியமாகும். அந்தச் சுருக்கமான வழி கண்டுபிடிப்பதைத்தான் இனி நமது கடமை என்ன என்ற இந்தத் தலைப்புக் கொடுத்து எழுத முன்வந்திருக்கிறேன்.

அதாவது, இன்று நமக்குள்ள—எதிரிகளின் பாது காப்பான இழிநிலை எதில் இருக்கிறது என்றால்,—"நாம் ஈன ஜாதி, கடைஜாதி, கீழான ஜாதி" ஆனதால், நாம் நம்மால் அடித்து உருவாக்கி, நம் செலவில் நடப் பட்ட ஒரு கல் உருவத்தை (சாமியை)க் கிட்ட நெருங் கினால் சாமி செத்துப் போகும்; அதை நேரில் நாமே பூசை செய்து வணங்கினால், அந்தச் சாமி செத்துப் போகும். அதனால் அதை நெருங்கக்கூடாது; பூசை செய்யக்கூடாது என்பதாகிய இது ஆகமம் என்று சட்டத்தினால் காப்பாற்றப்பட்டு வருகிற ஆகமம்—"ஆனதால், நீ வெளியிலேயே நிற்கவேண்டும்"—என்று சுப்ரீம் கோர்ட் தீர்ப்புக் கூறிவிட்டது. இனி நமது கடமை என்ன ?

இதை ஏற்றுக்கொண்டு, நாம் நம்மைத் தீண்டப் படாத பிறவி என்பதை ஒப்புக்கொண்டு, வெளியில் நின்று பார்ப்பானைத் தரகனாக வைத்து, அவன்மூலம் வணங்கும் ஈனப் பிறவி மக்களாகவே இருந்து மடிவதா ? நமது பின் சந்ததியையும் இப்படி இருக்கச் செய்வதா ?

அல்லது மானத்தை முன்னிட்டாவது, (அறிவீன மாக) கடவுளை வணங்குவது என்று கருதினாலும், அதற்காக ஈனப்பிறவி நிலையைப் பெற்றுக்கொள் ளாமல், அவசியம் என்று பட்டால், கடவுள் இருக்கும் இடமான கோவிலின் மதில் வாயிலில் நின்றே கடவுளை வணங்கிவிட்டு, நமது மானத்தைக் காப்பாற்றிக் கொள்வதா என்றுதான் இறுதியாக வேண்டுகிறேன்.

## நாம் தொட்டால் கடவுள் செத்துப் போகுமா ?

நாம் சூரியனை வணங்குகிறோம்; சந்திரனை வணங்குகிறோம்; கணபதியை வணங்குகிறோம்; நதி தீர்த்தங்களை வணங்குகிறோம். மற்றும், பலவற்றின் வணக்கம், பிரார்த்தனைகள் செய்கிறோம். எங்கும் கிட்டப் போனால் தீட்டு என்று எட்டி நிற்பதில்லை.

கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர்கள் யாருமே தங்கள் வணக்கத்தின்போது—பிரார்த்தனையின்போது கிட்டப்

போனால் தீட்டு என்று எந்த இடத்தையும் ஒதுக்கி வைக்கவே இல்லை. உலகத்தில் வேறு எங்குமே யாருக்குமே இப்படிப்பட்ட இடம் ஒதுக்கப்பட்டு, அதனால் எவருமே இழிபிறவியாக ஆக்கப்படவே இல்லை.

எனவே, நாம் மாத்திரம் ஏன் இந்த விஞ்ஞான காலத்தில், சந்திரமண்டலத்தில் சந்திரன்மீது கால் நடையாய் மக்கள் நடக்கும் காலத்தில் இப்படிப்பட்ட இடத்துக்குப் போகவேண்டும் என்று சிந்திக்கவேண்டியது நமது கடமையாகிவிட்டது.

கடவுள் நம்பிக்கை என்றால், நாம் தொட்டால், கிட்ட நெருங்கினால் கடவுள் செத்துப் போகும் என்று கருதி, எட்டி நிற்பதுதானா?

[18-4-'72 'விடுதலை' தலையங்கம்]

---

## மனிதன் கடவுளை நம்புகிறானா?

மனிதனுக்குள் புகுத்தப்பட்ட (கற்பிக்கப்பட்ட) கடவுள், "சர்வ சக்தியுள்ளது; எல்லாம் வல்லது; யாவுமாயிருப்பது; கடவுளன்றி அணுவும் அசையாது; கடவுளன்றி உலகில் எந்தக் காரியமும் நடவாது; யாவற்றையும் கடவுளே நடத்துகிறார்" என்றெல்லாம் கடவுளைப்பற்றிக் கூறித்தான் மனிதனுக்குக் கடவுள் புகுத்தப்பட்டிருக்கிறது மனிதனும் இந்தத் தன்மைகள், சக்திகள் இருக்கிறது என்கின்ற "உண்மை"யோடுதான் கடவுள் நம்பிக்கைக்காரன் ஆகிறான். ஆனால், வாழ்வில் மனிதன் எந்தத் துறையிலாவது, நடப்பிலாவது இந்தப்படி நம்பி நடந்துகொள்கிறானா?

—**தந்தை பெரியார்.**

## சுப்ரீம்கோர்ட் தீர்ப்பு:
## “ஆபரேஷன் வெற்றி, நோயாளி செத்தார்”

அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம்; அது பரம்பரைப் பாத்தியதை அடிப்படையில் இனி இருக்க முடியாது என்பதற்காக இந்து அறநிலைய பாதுகாப்புச் சட்டத்திற்கான திருத்தச் சட்டம் 1971-ல் தமிழ்நாடு அரசினரால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதை எதிர்த்து, அர்ச்சகர்கள் சுப்ரீம்கோர்ட்டில் அச்சட்டம் செல்லுபடியாகாதென அறிவிக்கக் கோரி, 12 ரிட் மனுக் களைத் தாக்கல் செய்தனர்.

தமிழ்நாடு அரசினர் சார்பாக நமது அட்வகேட் ஜெனரல் திரு. கோவிந்தசாமிநாதன், கவர்மெண்ட் பிளீடர் திரு. எஸ். மோகன் ஆகியோரும் ரிட்மனு தாரர்கள் சார்பில், திருவாளர்கள் என்.ஏ. பால்கிவாலா, நடேசன் மற்றும் சிலரும் வாதாடினார்கள்.

பிரதம நீதிபதி உட்பட அய்ந்து நீதிபதிகளைக் கொண்டு, சுப்ரீம்கோர்ட்டின் “அரசியல் சட்ட பெஞ்சு” ஒன்று இதை விசாரித்து, நேற்று தீர்ப்பு வழங்கியுள்ளது.

இத்தீர்ப்பின்படி, தமிழ்நாடு அரசு நிறைவேற்றிய சட்டம் செல்லுபடியாகும் என்றும், அர்ச்சகர்களை டிரஸ்டிகள் நியமிக்கும் செயல், மதக் காரியம் (Religious Act) அல்லவென்றும், அது மதச்சார்பற்ற காரியமே (Secular Act) என்றும் தீர்ப்பளித்துள்ளது.

எனவே, தமிழ்நாட்டிலுள்ள இந்து கோயில்களில் அர்ச்சகர்களின் பரம்பரை உரிமையை ஒழிக்கும் 1970-ம் ஆண்டைய தமிழ்நாடு இந்து அறநிலைய திருத்தச் சட்டம் செல்லும் என்று கூறி, ‘ரிட்’ மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன!

தோற்றத்தில் சட்டரீதியாகத் தமிழ்நாடு அரசுக்கும், சமுதாய சீர்திருத்த வேட்கையுடன், உணர்ச்சியுடன் காரியம் செய்தோருக்கும் இது வெற்றிதான் என்றாலும், இது ஒரு சட்ட வெற்றியே தவிர, கொள்கை வெற்றி என்று கருதமுடியாத அளவுக்கு அத்தீர்ப்பில் சுட்டிக் காட்டப்பட்ட பல முக்கிய செய்திகள், எந்த நோக்கத் திற்காகச் சட்டத் திருத்தம் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டதோ அதைத் தோற்கடிக்கும் தன்மையில் அமைந் திருக்கிறது!

இன்று 'இந்து' ஏட்டில் வெளியாகியுள்ள சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பு வாசகங்களில் பல, எந்த சாதி ஆதிக்கத்தைக் கட்டிக் காக்கப் பார்ப்பனர்களான மனு தாரர்கள் சுப்ரீம் கோர்ட்டில் முயற்சித்தார்களோ, அதை அவர்கள் பெற்றதுடன், அதற்குக் கோர்ட் மூலம் பலத்த பாதுகாப்பு செய்யப்பட்டிருப்பது போன்றதொரு நிலை ஏற்பட்டிருக்கிறது என்று காட்டுகின்றன.

சட்டத் திருத்தம் செல்லும் என்று தீர்ப்பு வழங்கப் பட்ட நிலையில், கோயிலில் அர்ச்சகர்கள் நியமிக்கப் படுவதும், பூஜை புனஸ்காரங்கள் நடைபெறுவதும், பழைய "வழக்கப்படி" ஆகமங்கள் என்னென்ன விதி முறைகள் வகுத்துக் காட்டியுள்ளனவோ அவைகளின் படிதான் எள்ளளவும் அவை பிறழாத வண்ணம், இனி தமிழ்நாடு அரசால் விதிகள் செய்யப்பட்டு (**Rules to be framed accordingly**) அமுல் நடத்தப்படவேண்டும் என்று பச்சையாகத் தெரிவிக்கப்பட்டுவிட்டது!

நாம் எதை எதிர்பார்த்தோமோ அதுவே நடந்து விட்டது. "ஆபரேஷன் வெற்றி; ஆனால், நோயாளி செத்துவிட்டார்" என்பது போன்றதொரு நிலை உண்டாகிவிட்டது! ஆபரேஷன் செய்வது நோயாளியை பிழைக்க வைக்கத்தானே? அந்தப்படிக்கில்லாமல், நோயாளி செத்தால் ஆபரேஷன் வெற்றியைப்பற்றி யார்தான் பெருமைப்பட முடியும்? மகிழ்ச்சி அடைய முடியும்?

மனுதாரர்கள் தமது வாதங்களில் சுட்டிக்காட்டியவைகள் பின்வருமாறு :—

"சாதி வேறுபாடின்றி அர்ச்சகர்களை நியமிக்க வேண்டுமென்ற ஒரு நோக்கத்துடன் இச்சட்டத்திருத்தம் கொண்டுவந்து நிறைவேற்றப்பட்டிருப்பதால், மாநில அரசு அர்ச்சகர்கள் ஆக விதிக்கும் சில தகுதிகள், ஆகம விதிகட்கு முரணாக இருக்கும்."

இதற்குப் பதிலளிக்கும் வகையில், சுப்ரீம்கோர்ட் தீர்ப்பு குறிப்பிடுவதாவது :

"சைவக் கோயில்களிலோ, வைஷ்ணவக் கோயில் களிலோ அர்ச்சகர்கள் நியமிக்கப்படுவதென்பது அந்தந்தக் கோயில்களுக்கென உள்ள ஆகம விதிகளின்படி தான் நடத்தப்படவேண்டும். அப்படிச் செய்யத் தவறினால், அது 28வது செக்ஷனுக்கு முரணானது மட்டுமல்ல, மதானுஷ்டானத்தில் அரசு தலையிட்டதும் ஆகும். அதன் தவிர்க்கமுடியாத விளைவு என்னவென்றால், கோயிலில் உள்ள சிலை தீட்டுப்பட்டதாகி விடும்."

**In a Saivite or Vaishnavite temple, the Court said, the appointment of Archaka would have to be made in accordance with directions given in the concerned "agamas" governing the temples.**

"Failure to do so would not only be contrary to Section 28 of the Act but would also interfere with religious practice the inevitable result of which would be to defile the image."

மதானுஷ்டானங்களிலும், பூஜை புனஸ்காரங் களிலும் அரசு தலையிடும் என்ற மனுதாரர்களின் அச்சம் அடிப்படையற்ற ஒன்று என்று சுப்ரீம்கோர்ட் கூறுவது மேலெழுந்தவாரியாகப் பார்த்தால், ஏதோ முற்போக்குக் கருத்துக்கு ஆதரவாகத் தோன்றினாலும்,

தத்துவத்தில் பழைமைக்கு, சனாதனத்திற்குச் சரியாக ஆணியடித்துப் பாதுகாப்புச் செய்துவிட்ட ஒரு நிலையே யாகும்.

அர்ச்சகர்களாவதற்கு என்னென்ன தகுதிகள் என்பவைகளையும், யோக்கியதாம்சங்களையும் இனி தான் நிர்ணயிக்கவேண்டும் என்ற நிலையில், எதற்கும் பழமையிலிருந்து நழுவமுடியாதபடி இறுகிப் பிடிப்பது போன்று தீர்ப்பின் வாசகங்கள் இருக்கின்றன.

In this context, the Court further observed : "Moreover, if any rule is framed by Government which purports to interfere with the rituals and ceremonies of temples, the same will be liable to be challenged by those who are interested in the temple worship."

இதன் தொடர்பாக கோர்ட் மேலும் கூறுவதாவது: "இதற்குமேல், கோவில்களது சடங்குகளிலோ, அல்லது சம்பிரதாய நிகழ்ச்சிகளிலோ தலையிடும் வகையில் ஏதாவது ஒரு விதி செய்யப்படுமானால், அத்தகைய விதியைக் கோயில் வழிபாடுகளில் ஈடுபாடு உள்ளவர்கள் கோர்ட்டுகளுக்குச் சென்று செல்லுபடியற்றதென கோரி, பரிகாரம் தேட முயற்சிக்க இடம் உண்டு."

ஆகம விதிகள் என்ன சொல்லுகின்றன என்பதை, சுப்ரீம்கோர்ட்டில், மனுதாரர்களான பார்ப்பனர்கள் சுட்டிக்காட்டிய வைகானச ஆகமத்தின் 24வது அத்தியா யத்தில் சாதி அடிப்படையில் குறிப்பிட்டுள்ள ஆகம விதிகளை வெளியிட்டு, சாதியைப் பாதுகாக்கும் ஏற்பாடுகளாக அவைகள் எவ்வாறு விளங்குகின்றன என்பதை நேற்று வெளியிட்டிருந்தோம்.

சுப்ரீம்கோர்ட் அளித்துள்ள தீர்ப்பில் மிகவும் தெளிவாக அதை ஏற்றுக்கொண்டுள்ளது

"The Court said that the two fold objective of rituals was to confer spiritual benefit on lay worshippers when

they congregated and to preserve the deity frcm pollution or defilement (by strictly following agamic injunction in matters of worship and rituals etc.)

If there was any departure or violation of any of the rules relating to worship as contained in agamas, an image might become defiled and in fact, purificatory ceremonies had to be performed for restoring sanctity of the concerned shrine, the Court added."

"சடங்குகள் நடத்தப்படுவதற்கு இரண்டு முக்கிய நோக்கங்கள் உண்டு. கோயில்களில் கூடிநின்று வழிபாடு செய்யும் பாமர பக்தர்களுக்கு ஆத்மீகப் பலனை உண்டாக்கவும், கோயிலில் "சாமி" தீட்டாகாமலோ, அசுத்தப் படுத்தப்படாமலோ தடுக்கப்படவே, ஆகம விதிகளை அப்படியே கடைப்பிடிக்கவேண்டியதாகியுள்ளது!

இதிலிருந்து ஏதாவது வழுவினாலோ, இவ் விதியை மீறும் தன்மையில் ஆகம விதிகட்கு முரணாக ஏதாவது விதிகளைச் செய்தாலோ, கோயில் சாமியும் தீட்டாகிவிடுவதுடன், அதனைப் புனிதப்படுத்தும் சம்ப்ரோட்சணம் (Purificatory Ceremonies) சடங்குகளைக் கோயில்களில் நடத்தி ஆகவேண்டும்."

"ஆபரேஷன் வெற்றி; நோயாளி செத்தார்" என்பதற்கு இதைவிட வேறு என்ன ஆதாரம் வேண்டும்!

இந்திய அரசியல் சட்டம் திருத்தப்படாமல், "மதச் சுதந்திர உரிமை" என்ற சாதி தர்ம உரிமைகள் இருக்கும்வரை இத்தகைய சாதி பாதுகாப்பு நடவடிக்கை ஏற்பாடுகள்தான் சுப்ரீம்கோர்ட் தீர்ப்பாகிவிடும்.

சுப்ரீம்கோர்ட் தீர்ப்பு—பொருளாதார முன்னேற்றத்திற்குத் தடையென்றவுடன், அரசியல் சட்டத்திற்குப்

பல திருத்தங்கள் 24, 25, 26 என்று கொண்டுவரப்பட வில்லையா ?

அதுபோல இதற்கும் கொண்டு வந்து, இதன் விளைவுகளை மாற்ற முயற்சித்தால் ஒழிய, இனி சாதியை ஒழிக்கமுடியுமா ?

சட்டத் திருத்தம் கூடாது; கொண்டுவரவே முடியாது. டில்லி அரசு முயலாது என்றால், நம்மவர் நெருங்கினால் தீட்டாகிவிடும் என்ற கடவுள்கள் உள்ள கோயில்களுக்கு நாம் சென்று வணங்கலாமா? அதை விட மானங்கெட்ட செயல் என்னவென்று கேட்பதைத் தவிர, வேறு வழிதான் என்ன ?

தமிழ்நாடு அரசு இத்தீர்ப்பின் விளைவுகள்பற்றி நன்கு ஆராய்ந்து, மேற்கொண்டு செய்யவேண்டிய காரியங்களை உறுதியுடன் செய்யும் என நாம் நம்பு கிறோம்.

இது சுப்ரீம்கோர்ட் தீர்ப்பு என்றாலும், கம்யூனல் ஜி ஓ. என்ற வகுப்புவாரி உரிமை செல்லாது என்று முன்பு சுப்ரீம்கோர்ட் தீர்ப்பு தந்தபோது, டாக்டர் அம்பேத்கார் அவர்கள் குறிப்பிட்ட அதே கருத்தைத் தான் சமூக அநீதியான சாதி தர்மத்தைக் காப்பாற்றும் இத்தீர்ப்பைக் கண்டு நாம் கூற விரும்புகிறோம்.

"I am bound by the decision but I am not bound to respect the same."

"நான் இத்தீர்ப்புக்குக் கட்டுப்படுகிறேன். ஆனால், அத்தீர்ப்புக்கு மரியாதை காட்ட என்னால் முடியாது."

நம்மைக் கீழ்சாதியாக்கும், நாலாம் சாதியாக்கும், சூத்திரப்பட்டத்தை நிரந்தரமானதாக்கும் இத்தீர்ப்பின் பயனை அரசியல் சட்டத் திருத்தத்தின்மூலம் மாற்றா விட்டால் சோஷலிசம், சாதி ஒழிப்பு வெறும் பேச்சு; சுத்த மோசடியாகிவிடும்.

# 2

தமிழ்நாடு இந்து அறநிலையப் பாதுகாப்புச் சட்டத் திருத்தம்—அர்ச்சகர் நியமனம்பற்றியது—செல்லும் என்று சுப்ரீம்கோர்ட் தீர்ப்பளித்தது என்றாலும், அனைத்துச் சாதியிலிருந்தும் அர்ச்சகர்களை நியமிக்கலாம் என்ற அச்சட்டத் திருத்தத்தின் நோக்கங்களிலும் காரணங்களிலும் (Objects and reasons) காட்டப்பட்ட லட்சியத்தை அமுல்படுத்த இடம் ஏதும் வைக்காமல்,

அர்ச்சகர்களை டிரஸ்டிகள் நியமிப்பது என்பது ஒரு மதச்சார்பற்ற காரியம். ஆகவே, அதற்கு வழிவகை செய்யும் இச்சட்டத்திருத்தம் அரசியல் சட்டத்தின் 25, 26 ஷரத்துக்களுக்கு முரணானதல்ல என்றுதான் தீர்ப்புத் தந்ததே தவிர,

பூஜை செய்வதும், மணியடிப்பதுமான பணிகளை அர்ச்சகர்கள் செய்கையில், அது மதானுஷ்டானமாக இருப்பதால் சைவ, வைஷ்ணவ ஆகமங்கள் எப்படிக் கட்டளையிடுகின்றனவோ, அதன்படிதான் அந்தச் சடங்குமுறைகளைக் கடைப்பிடிக்கும் தன்மையில், அந்தக் குறிப்பிட்ட சாராரிலிருந்து அர்ச்சகர்கள் நியமிக்கப்படவேண்டுமே ஒழிய, அதற்கு மாறாக எந்த விதி செய்யப்பட்டாலும் அது செல்லத்தகாதது என்ற நிலையைத்தான் அத்தீர்ப்பு உறுதிப்படுத்தியிருக்கிறது.

மேற்காட்டிய கருத்தினை வலியுறுத்தும் பகுதிகளை அத்தீர்ப்பிலிருந்து சுட்டிக் காட்டுவது மிகவும் பயன்தரும் என்றே கருதுகிறோம்.

The Court oberved : "Worshippers lay great store by rituals and whatever other people, not of the faith, may think about these rituals and ceremonies, they are a part of the Hindu religious faith and cannot be dismissed as either irrational or superstitious."

"வழிபாடு நடத்துவோர் சடங்காச்சாரங்களுக்கும் பெரும் மதிப்பு வைத்திருக்கிறார்கள். அந்த மதம்மீது நம்பிக்கையில்லாதவர்களான பிற மனிதர்கள் என்ன தான் இந்தச் சடங்குகளைப்பற்றியும் ஆச்சாரங்களைப் பற்றியும் கருதினாலும் அவை இந்துமத நம்பிக்கையின் ஒரு பகுதியே. அவை பகுத்தறிவு அற்றவை அல்லது மூடநம்பிக்கையானவை என்று நீக்கிவிட முடியாது."

இந்துமத நம்பிக்கையின் பகுதிகளாம் இவைகள்! இவைகளைப் பகுத்தறிவுக்கு மாறுபட்டவை என்றோ, மூடநம்பிக்கையானவை என்றோ தள்ளிவிடமுடியாதாம்! எப்படி இருக்கிறது பார்த்தீர்களா ?

அதுமட்டுமல்ல, மேலும் பாருங்கள்.

Stating that agamas had rules with respect to Archakas, the Supreme Court said that, for instance, in a Saivite temple, only a devotee of Siva and that too, belonging to a particular denomination or group or sub-group was entitled to be an Archaka.

ஆகமங்களும் அர்ச்சகர்கள்பற்றி விதிமுறைகள் கொண்டவைகளாக இருக்கின்றன என்பதைச் சுப்ரீம் கோர்ட் குறிப்பிட்டதுடன், அது ஒரு உதாரணத்தையும் சுட்டிக்காட்டியுள்ளது.

சிவ வழிபாட்டுக்காரர்கள் கோயிலில் ஒரு சிவ பக்தரைத்தான் அதுவும் குறிப்பிட்ட ஒரு பிரிவினைச் சார்ந்தவரையோ அல்லது உபபிரிவைச் சார்ந்த வரையோதான் நியமிக்க முடியும்.

தமிழ்நாடு அரசு சட்டத் திருத்தம் நிறைவேற்றிய தின் நோக்கம், சில தகுதிகளை வைத்துத் தற்போதுள்ள பரம்பரை சாதிமுறையை மாற்றி அர்ச்சகருக்குரிய கல்வி தந்து ஆக்குவது என்னும்போது அதில் ஆகம விதிப்படித்தான் அர்ச்சகர் நியமிக்கப்படவேண்டும்; அதுவும் குறிப்பிட்ட பிரிவு அல்லது உபபிரிவினர்—

Belonging to particular denomination or group or sub group. ஆக இருந்தே தீரவேண்டும் என்பதை ஒரு முன் நிபந்தனை ஆக அல்லவா விதிக்கிறது?

அது மட்டுமல்ல.

After referring to an affidavit of an expert in Agamas, the Court said : "It is therefore manifest that the Archaka of a sectarian denomination temple, besides being proficient in the rituals appr opriate to worship of a particular deity, must also belong, according to agamas, to a particular denomination."

ஆகமங்களில் நிபுணரான ஒருவர் தாக்கல்செய்த பிரமாண பத்திரத்தைக் குறிப்பிட்டுவிட்டு, கோர்ட் குறிப்பிட்டதாவது:

"ஒரு குறிப்பிட்ட சாமியினை வழிபடுவதற்குரிய சடங்குகளில் கெட்டிக்காரராக ஒரு அர்ச்சகர் இருப்ப தோடு, அக்குறிப்பிட்ட பிரிவினரது கோயிலில் அர்ச்சக ராகக்கூடிய தகுதியுடன் கூடியவராக அவர் இருப்ப தோடு, ஆகமவாதிகள் கூறுகிறபடி, அக்குறிப்பிட்ட பிரிவைச் சார்ந்தவராகவும் அவர் இருத்தல் அவசியம் என்பது தெளிவாய்த் தெரிவிக்கப்படுகிறது!"

—இதற்கு மேலுமா விளக்கம் தேவை?

சுப்ரீம்கோர்ட்டார் ஒருபடி மேலேசென்று, சந்தேகத் திற்கே சிறிதும் இடம் அளிக்காத தன்மையில் குறிப்ப தாவது :—

An Archaka of a different denomination "is supposed to defile the image by his touch," the Court said and added "since it is of the essence to religious faith of all worshippers that there should be no pollution of or deilement of image under any circumstances, the Archaka undoubtedly occupies an important place in the matter of temple worship."

'ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு, இரட்டைத் தாழ்பாள்' என்ற பழமொழி போன்று, வேறு சாதியிலிருந்தோ, பிரிவிலிருந்தோ ஒருவர் அர்ச்சகராக நியமிக்கப்பட்டால், அவர் சென்று "சாமியைத் தொட்டுப் பூஜை செய்ய ஆரம்பித்தால், சாமி தீட்டாகிவிடும்."

> "மத நம்பிக்கையின் மிக முக்கிய சாரம், எந்த சந்தர்ப்பத்திலும் சாமி விக்கிரகம் தீட்டுப் படுவதோ, அசுத்தப்படுவதோ கூடாது என் பதேயாகும். எனவே, அர்ச்சகர்கள் கோயில் வழிபாட்டில் மிக முக்கியமானதொரு இடத் தைப் பெற்றுள்ளார்கள்!"

—இதைவிட சாதி தர்ம பாதுகாப்புக்குப் பலமான ஏற்பாடு வேறு வேண்டுமா?

**The Court said that it had been recognised for a long time that where the ritual in a temple could not be performed except by a person belonging to a specified denomination, the purpose of worship would be defeated.**

"கோயில்களில் சடங்குகள் ஒரு குறிப்பிட்ட பிரிவை சார்ந்தவரைத் தவிர, மற்ற எவர் செய்தாலும் அது வழி பாட்டுக்குரிய நோக்கத்தை முறியடித்ததாகும் என்பது நீண்ட காலமாக அங்கீகரிக்கப்பட்டதொரு நடைமுறை யாகும்."

விட்டகுறை தொட்டகுறை கூட இல்லாது, அவ்வளவு தெளிவுக்குமேல் தெளிவாக அவர்கள் தெரிவித்துவிட்டார்கள்!

சாதியை ஒழிக்காமல், நாம் அனைவரும் சூத்திர னாக மட்டும்தான் இருப்பதா?

நாம் இதனைச் சுட்டிக்காட்டுகையில், ஒருசிலர் அர்ச்சகர்களாக, ஒரு குறிப்பிட்ட பிரிவினர்தான் இருக்கவேண்டும் என்று ஆகமவிதிகள் கூறப்படுவது எப்படிப் பார்ப்பனருக்கு மட்டும் பொருந்தும்? சில கோயில்களில் பண்டாரங்கள் பூசை செய்யவில்லையா என்று கூறித் திசைதிருப்ப முயற்சிக்கலாம்!

சாதி வேறுபாடு இன்றி, அனைவரும் சாமியைத் தொழும் மனித உரிமையைப் பெறவேண்டும் என்பது தானே நாம் கோருவது. ஒரு குறிப்பிட்ட சாதியினர் அல்லது பிரிவினர்தான் என்றால், அது சாதி காக்கும் ஏற்பாடு அல்லாமல் வேறு என்ன ? [redacted]

[redacted] சாமி தீட்டாகிவிட்டால், அதற்கு சம்ப்ரோட்சணம் செய்வது ஒரே மாதிரியாக இல்லையா ? இன்னின்ன சாதிக்காரரால் தீட்டாக்கப்பட்டால், இன்னின்ன வகையில் தீட்டுக் கழித்துப் புனிதப்படுத்தவேண்டும் என்ற ஆகமம், சாதியை வலியுறுத்தும் ஏற்பாடாகத்தானே இருக்கிறது ?

கைப்புண்ணுக்குக் கண்ணாடி தேவையில்லை ; நமது பிறவி இழிவைப் பூதக்கண்ணாடியால் பெருக்கிக் காட்டுவதுபோன்று வந்துள்ளது சுப்ரீம்கோர்ட் தீர்ப்பு !

இதன் விளைவுகளை மாற்ற, தமிழ்நாடு அரசு தீவிர முயற்சிகளை எடுக்கவேண்டும் ! அரசியல் சட்டத் திருத்தம் கொண்டுவரும்படி டில்லியை வற்புறுத்தியே ஆகவேண்டும் !

சமதர்மம் என்பது டில்லி ஆட்சியின் உண்மை லட்சியமானால், இதை உடனடியாக மற்ற அரசியல் சட்டத் திருத்தங்களைக் கொண்டுவந்ததுபோல் கொண்டுவர வேண்டாமா ?

தமிழர்கள் கோயிலுக்குப் போய், சூத்திரப் பட்டத்தைச் சுமந்து, மானத்தை விற்றுத் திரும்புவதைவிட, சும்மாயிருப்பது சுகமல்லவா ?

பக்தி என்றால், மானத்தைத் தியாகம் செய்துவிட வேண்டுமா ? சிந்தியுங்கள் ! ஆழ்ந்து சிந்தியுங்கள்.

தந்தை பெரியார் கட்டளையை எதிர்நோக்கிக் காத்திருங்கள் ! இதுபோன்ற அரியவாய்ப்பு வரலாற்றில் எளிதில் வாய்க்காது ! வாய்க்கவே வாய்க்காது !

[15-3-'72, 16-3-'72 'விடுதலை' தலையங்கம்]

———

# ஆகமம் என்ற பெயரால் நடக்கும் அக்கிரமம் பாரீர்

## 1

**சாமி சிலை தீட்டாகிவிட்டால்......**

**"வைகானச ஆகமத்"**தில் உள்ள பிருகு சம்ஹிதை யின் கிரியாதிகாரம் பற்றிய 24வது அத்தியாயத்தில் தரப் பட்டிருக்கும் பிராயச்சித்தம் மீதான ஒரு குறிப்பு.

1. அர்ச்சக அன்யாத்லி ஜைஹி ஸ்புருஷடே சுத்தோடை ரபிஷ்சாயேத்

சப்தபிஹி சத்ரியைஹி ஸ்புருஷ்டே கலாசைஹி ஸ்னபாயேத்தரிம்.

பொது வழிபாட்டுக்குரியதான கோயில்களில் கடவுளின் (விஷ்ணு) உருவத்தையோ, சிலையையோ அல்லது பிற இதுபோன்ற உருவத்தையோ (கோயில் சடங்குகளை அதிகாரப்பூர்வமாக நடத்திவைப்பவரான) அர்ச்சகர் தவிர, பிற பிராமணன் எவனாவது தொட்டு விட்டானானால், பின்னர் அந்தச் சிலையையோ அல்லது உருவமோ தூய நீரினால் சம்ப்ரோட்சணம் செய்யப்பட வேண்டும். சத்திரியர்களால் (போர் வீரர் (ராஜ) சாதி) தொடப்பட்டுவிட்டதானால், பின்னர் ஏழு கலசங்களை வைத்து முறைப்படி வணங்கிய பின், சம்ப்ரோட்சணம் செய்யப்படவேண்டும்.

2. ஸ்டிபாயேத் வைஸ்யா சம்ஸ்பர்சாய் சதுர்விம் சதிபிஸ்ததா.

சாந்தி ஹோமம் சா ஜுஹுயாத் சக்திதோ போஜ யேத் த்விஜன்.

**வைசியர்களால்**

(வர்த்தக சமூகம்) தொடப்பட்டுவிட்டதானால், பின்னர் இருபத்தி நாலு கலசங்களை வைத்து, முறைப்படி வணங்கிய பின், பிம்பங்களுக்குச் சம்ப்ரோட்சணம் செய்யப்படவேண்டும். அதைத் தொடர்ந்து சாந்தி ஹோமமும், பிராமண போஜனமும் செய்யப்பட வேண்டும்.

3. அஷ்டோத்ர சதாய்ஹி சூத்ரைஹி சம்ஸ்புர்சே ஸ்னாபயேத் தடோ.

மகாசாந்திம் ததா ஹுத்வா பிராமணானி போஜயேத்.

ஸ்புர்ஷைஹி அனுலோனயஹி சூத்ரோத பிராயஸ்சித்தம் சமாச்சரேத்.

**சூத்திரர்களால்**

(நாலாவதான உழைக்கும் சமூகம்) தொடப்பட்டு விட்டதானால், பின்னர் நூற்றியெட்டுக் கலசங்களை வைத்து, முறைப்படி வணங்கிய பின், பிம்பங்களுக்குச் சம்ப்ரோட்சணம் செய்யப்பட வேண்டும். அதைத் தொடர்ந்து மகாசாந்தி ஹோமமும், பிராமண போஜனமும் செய்யப்பட வேண்டும். அனுலோமர்களால் தொடப்பட்டுவிட்டதானால், பின்னர் பிராயச்சித்தம், சூத்திர ஸ்பர்சத்துக்கு விதிக்கப்பட்டிருப்பதுபோல் செய்யப்பட வேண்டும்

# 2

## 1. ஸ்ரீ க்ஷணிகாசல மகாத்மியம் (சுலோகம் 95)

“ நியா மேன ப்ரதிதினாம்
த்ரி சந்த்யான பூஜயம் குகம்

குமார தாந்த்ர மார்கேனா
பூஜா த்ரவியோயிர் மனோ ஹரைஹி''

'குமார தந்திரம்' என்ற நூலில் கூறப்பட்டிருக்கும் விதிமுறைகளுக்கு இணங்க பூஜைப் பொருட்களும், திரிகால தினசரி பூஜையும் தேர்ந்தெடுத்துக் கையாளப் படவேண்டும்.

**2. குமார தந்திரம் நித்திய பூஜாவிதி பயம்**

" ஆத்மார்த்த யஜானன் குறியாத்
நா குறியாத்து பரார்த்தகம்
ஆதி சைவா பிரகார்த்தவ்யம்
ஆத்மார்த்தங்கோ பரார்த்தகம்"

பூஜையின் ஆத்மார்த்தங்களையும், பரார்த்தங் களையும் ஆதிசைவர்கள் மட்டுமே செய்யலாம். மற்ற வர்கள் ஆத்மார்த்த பூஜையை மட்டுமே செய்யலாம்.

**3. குமார தந்திரம் - ஆச்சாரிய லட்சணப்படலம்**

" ஆதிசைவா குலோத் பூதா
சிவ த்விஜா எதீர் இதகா
பரார்த்த பூஜா நாம் தேனா
கர்த்தேவ்யம் முனிபுங்கவா"

பரார்த்த பூஜை அதாவது, மக்களுக்கான வழிபாடு ஆதிசைவப் பார்ப்பனர்களின் வழித்தோன்றல்களினால் மட்டுமே செய்யப்படவேண்டும்.

**4. ''பரார்த்தயஜனே ஆதிசைவரும் ஏவாதிகரா''**

மற்றவர்களுக்கான வழிபாட்டில் ஆதிசைவர்களுக்கு மட்டுமே உரிமை இருக்கிறது.

" தவேமத் பரார்த்தம் ஆத்மார்த்தம் ஸ்தாபனம்
யஜானம் ததே

சிவவிப்ரேன கர்த்தவ்யம் அன்யேசம் ஸ்வார்த்தம்
ஏவா ஹி
பரார்த்தம் அபி குர்யாச்செல்லோபேனார்-பதிஸ்ததா
தத்ரஸ்த்ரஸ்ய வினாச ஸ்யாத் அசிரேன நா
சமயாயஹா "

## காமிகா, தந்திராவதாரப் படலம் 154-55

ஸ்தாபனம் அல்லது நிறுவுதல் யாஜனா அல்லது இருவகையான தினசரி வழிபாடு. ஒருவன் தனது சொந்த நோக்கத்துககாகச் செய்வது ஆத்மார்த்தம்; பிறருக்காகச் செய்வது பரார்த்தம். இந்த இரண்டில், பரார்த்தம் ஒரு சைவப் பார்ப்பனரால் மட்டுமே செய்யப் படவேண்டும். ஸ்மார்த்தம் மட்டுமே பிறரால் செய்யப் படலாம். சைவப் பார்ப்பானல்லாத ஒருவன்மூலம் பரார்த்தத்தையும்கூட ஒரு மன்னன் குழப்பம் அல்லது பேராசை காரணமாக நடத்த நேர்ந்தது என்றால், அவனது நாடு வெகு சீக்கிரத்தில் நாசமாகப் போய் விடும்.

5. "ஆதிசைவஸ்த்ரிசைசவேசு ததா பம்பதாதிசு
ஸ்தாபனம் யாஜனம் குரியாத் சித்தாங்தோக்தவிதானதா"

(கரணா—தந்திராவதாரப் படலம் 75-76)

மூன்றுவகை சைவர்களில் ஆதிசைவர்கள் மற்றும், பாசுபதர்கள் மட்டுமே சித்தாந்தங்களில் விதிக்கப்பட்டிருக்கும் விதிமுறைகளுக்கு இணங்க நிறுவனம் செய்ய வேண்டும்; வழிபாடு நடத்தவேண்டும்.

6. "விப்ரக்சத்ரியவித்சூத்திரா தீக்சிதஸ்கா ப்ரவேசகா
ஆத்மார்த்தயஜானம் குர்யான் நா குர்யாச்ச பரார்த்தகம்
ஆத்மார்த்தம் சா பரரார்த்தம் சா ஸ்வாதிசைவேனா
பூஜிதம்
ஆதிசைவைத் ப்ரோக்தா ஸா சிவப்ப்ரஹ்மணோ குரு
சிவோத்பவம் து சைவம் ஸ்யாச்சை-வோத்பவா சதாசிவா
சதாசிவத் து சம்பூதா சிவாஸ்த்திர் உதார்த்தா

சிவனே ஸ்தாபிதம் சைவம் சைவயேன ஸ்தாபிதம் சிவம்
சிவசைவய்சுதாத்மா சிவப்ரஹ்மரை இஸ்யதே
சதுர்வேதாதிகரித்வாச்சைவ சித்தாந்த பாரகா
சதுர்வர்ணாதிகரத்வாத் ஆதிசைவஇதி ஸ்மார்த்தா
ஆதிசைவஹா சிவோ ருத்ரோ சுத்தாத்ம சுத்தசைவகா
தச்மச்சைவம் ப்ரார்கர்த்தவ்யம் ப்ரதிஸ்துத்சவாந்தகம்
உத்சவாதி ப்ராயஸ்சித்தம் ஆதிசைவனா கரயாத்
ஆகமோக்த பிரகரேனா ப்ரதிஸ்தலிங்க பூஜானம்
ஆதிசைவஸ்ய பூஜா சா சர்வசித்திகாரி ஸ்மார்த்தா
அன்யவிப்ரஸ் ப்ரசேனவ்ய சர்ஷைர் தேவேலகோ பவேத்
யோடிமோகேன குர்வித்தராஜ்னோ ராஷ்ட்ரஸ்ய துஸ்நிதி

(கரரை, நித்யார்ச்சனாவிதி படலம் 17–25)

பார்ப்பான் (பொது) சத்திரியன், வைசியன் மற்றும் சூத்திரன் எல்லா தீட்சைபெற்றோரும், ஆரம்பநிலையில் இருப்போரும் ஆத்மார்த்த பூஜை மட்டும் செய்யலாம்; பரார்த்த பூஜை செய்யக்கூடாது. ஆத்மார்த்தம், பரார்த்தகம் ஆக இரண்டையும் செய்யக்கூடியவன் ஒரு நல்ல ஆதி சைவன் மட்டுமே ஆதிசைவன் என்று அவன் அழைக்கப்படுவதால், அவன் ஒரு குருவாகவும், ஒரு சைவப் பார்ப்பானாகவும் இருக்கிறான். சைவம் சிவனில் இருந்து தோன்றியது. சிவத்திலிருந்து சதாசிவமும், சதாசிவத்தில் இருந்து சிவனுக்குரியவனான சிருஷ்டிகள் தோன்றின. சிவனும் சைவமும் ஒன்றினால், மற்றொன்று நிறுவப்பட்டவை. எனவே, சைவப் பார்ப்பனன் சிவன், சைவன் ஆகிய இரண்டிலும் சுத்திகரிக்கப்பட்டவனாகக் கருதப்படுகிறான்.

4 வேதங்களிலும், சைவ சித்தாந்தங்களிலும் சலுகைகள் பெற்றவனாதலாலும், 4 வர்ணங்களின் மீதும் உரிமை கொண்டிருப்பவனாதலாலும் அவன் ஒரு ஆதிசைவன் என்று அழைக்கப்படுகிறான். சுத்தமான இருதயம்கொண்ட ஆதிசைவன் சுத்த சைவனே ஆவான்; அவனே ருத்திரனும் ஆவான். பிரதிஷ்டையிலிருந்து உற்சவம் வரையிலும், உற்சவத்திலிருந்து பிராயச்சித்தம் வரையிலும் அனைத்தும் ஒரு ஆதி

சைவனால் மட்டுமே செய்யப்படவேண்டும். அதுவும் கூட ஆகமங்களில் விதிக்கப்பட்டுள்ள விதி முறைகளின் படி ஆதிசைவனால் செய்யப்பட்ட பூஜை, எல்லா வகையான சித்திகளையும் அல்லது பூர்த்திகளையும் நல்குகிறது. அவனைத் தவிர்த்த பிறர் அனைவரும் பரார்த்தம் செய்வதற்குத் தகுதியற்ற தவறான மனிதர்கள். என்றபோதிலும்கூட அவர்களால் செய்யப்பட்டது என்றால், மன்னனுக்கும், மன்னனின் நாட்டுக்கும் பெரிய ஆபத்து நேரிடும்.

7. "கர்சானதி ப்ரதிஷ்டாந்தம் ஆதிசைவயேன கரயேத்"

(கரணா நித்தியார்ச்சனாவிதி 35)

கர்சானம் முதற்கொண்டு, பிரதிஷ்டைவரையிலான சடங்குகளை ஒரு ஆதிசைவன் மட்டுமே செய்ய வேண்டும்.

8. "பரார்த்தம் ஆதிசைவானாம் ஆத்மார்த்தம் வா
சமர்சயேத்
ஆதிசைவகுலா ஜாதா ஸ்ரேஷ்டா ஸியத் **ஸ்**தாபண்டிசு
விபரயதா**ஸ்** சதுர்வர்ணா அபி யோக்யா **ஸ்**வகர்மானி
திக்சயம் சர்வமார்த்தியானம் பிரதி**ஸ்**தயாம் அதேத்சவே
வியாக்யானதென சா சஸ்த்ர ஆவர்த்தே சதா
பரார்த்ததே"

(காமிகா(உத்தர்பாகம்) ஆச்சார்யா பிசேக படலம் 15-17)

பார்ப்பனர்களும், 4 வர்ணங்களைச் சேர்ந்தவர்களான பிறரும் தங்களது சொந்த சமயச் சடங்குகளைச் செய்யத் தாராளமாகத் தகுதி படைத்தவர்களேயானாலும்கூட அவன் மாத்திரமே—ஆதிசைவர்களின் குடும்பத்தில் பிறந்த அவன் மாத்திரமே பிறருக்குத் தீட்சை கொடுப்பதற்கும், பிரதிஷ்டைக்கும், உற்சவத்துக்கும் **ஸ்**னபானம் எனப்படும் சடங்காச்சார அபிசேகத்துக்கும், சம்ப்ரோட்சனத்துக்கும், பிராயச்சித்தத்துக்கும், பிற நீராட்டுகளுக்கும் சிவத்தத்துவங்களை விளக்கிக் கூறுவதற்கும், ஆத்மார்த்தம் மற்றும் பரார்த்தம் ஆகிய

இருவகை பூஜைகளைச் செய்வதற்கும் மிகவும் பொருத்த மானவன்.

9. "ஆதிசைவஸ்ய கர்த்தவ்யம் ஆத்மார்த்தம் சாரார்த்தகம்
ஸ்தாபனம் யாஜனம் சர்வம் சதிசைவர் சகம் விது
க்ருதும் செட் அன்யதா ஸ்யதம் அபிசரயாசைவா ஹி"

(கேரணா, ஆச்சாரியலட்சணப் படலம்)

பரார்த்தம் மற்றும் ஆத்மார்த்தம் என்ற இரண்டும் ஒரு ஆதி சைவனால் மட்டுமே செய்யப்படவேண்டும். ஸ்தாபனம் செய்வதற்கும், தினசரி வழிபாட்டுக்கும் அவன் மட்டுமே தகுதி படைத்தவன். இவ்வாறன்றி, வேறு வகையில் நடந்தால் அந்தச் செயல்தானே தீமை பயக்கும் ஒன்றாகும்.

## 10. ஸ்ரீஸ்காந்தய் சங்கரசம் ஹிதயம் (ஸ்லோகம் 23)

"புன்ஹா கைலாசா மாச்சலம் காந்தார ஸ்தேச்ச தேசிகஹாதத் சந்ததியா குராவஹா பாரம்ப்ரய க்ரமேனதே.

பரார்த்த பூஜை செய்வதற்கென்று தீட்சைக்கு உள்ளாவோர்கூட ஆதிசைவர்களின் வழித்தோன்றல் களாக மட்டுமே இருந்தாக வேண்டும்.

# ஆகமங்களும் அர்ச்சகர்கள் நியமனமும்

## 1

கோயில்களில் அர்ச்சகர்களை நியமிப்பது சிவ, விஷ்ணு ஆகமங்களைப் பின்பற்றிப் பழைய சடங்குகள், சம்பிரதாயங்கள் இவைகளை வழக்கப்படி நடத்த வேண்டும் என்று பார்ப்பனர்களும், பழமையாளர்களும் கோருவதையும் நாட்டின் உச்ச நீதிமன்றமான சுப்ரீம் கோர்ட்டும் ஏற்றுத் தீர்ப்புத் தந்திருக்கிறது.

பார்ப்பன ஆதிக்கத்தின் உயர்நிலை, வர்ணாசிரமம் என்னும் சாதி தர்மத்தின் அஸ்திவாரம் எல்லாம் அதில் இருப்பதால், அந்த அமைப்பினைப் பாதுகாப்பதில் பார்ப்பனர் அனைவரும் கண்ணுங் கருத்துமாய், எப்போதும் மிகவும் விழிப்புடன் செயலாற்றி வருகின்றனர்.

திருவனந்தபுரத்தில் காஞ்சிகாமகோடி பீடத்தின் ஜூனியர் சங்கராச்சாரியார் பேசுகையில், "கோயில்களில் பொதுமக்கள் கடுமையான கட்டுப்பாட்டைப் பின்பற்றவேண்டும். **பூஜைகளை எல்லோரும் செய்ய முடியாது**" என்பதையும், "அதற்கான தகுதியும், திறமையும் உடையவர்கள் மட்டுமே பூஜைகளைச் செய்யமுடியும் என்பதையும் பொதுமக்கள் புரிந்து கொள்ளவேண்டும்" என்றும் குறிப்பிட்டுள்ளார்!

இதற்கென உண்டான ஆகமத்தின்படிதான் வழிபாடு, பூஜை நடத்தப்படவேண்டும். அதில் குறிப்பிட்ட பிரிவினர், அல்லது வகுப்பினரிலிருந்துதான் அர்ச்சகர் இருக்கவேண்டும் என்று இன்றும் வற்புறுத்தப்படுகிறது!

இதைவிட ஒரு மோசடியான ஏற்பாடு வேறு இருக்கவே முடியாது. காரணம், ஆகமங்கள் என்பவை

கள் ஒரு வரலாற்று ரீதியான தொகுப்புகள் அல்ல. காட்டுமிராண்டிக் காலத்தில், விஞ்ஞான அறிவியல் அறிவு நாகரீகமும் பரவாத சுமார் 4000, 5000 ஆண்டு கட்குமுன் ஏற்பட்டவைகள் என்று சொல்லப்படுகிறது.

4000, 5000 ஆண்டுகட்கு முன்பு ஏற்பட்ட ஒன்று இன்று உலகம் வளர்ந்துள்ள நிலையில் அறிவுக்குப் பொருந்துமா? கோயில்களில் மின்சார விளக்குகள் போடப்படுகின்றனவே! அது ஆகமங்களில் உள்ள வையா? ஆகமங்கள், மின்சார விளக்கு கர்ப்பகிரகத்தில் கோயிலுக்குள் இருக்கலாம் என்று அனுமதிக்கின்றனவா? திருப்பதி போன்ற பல கோயில்களில் "ஏர்கண்டிஷன்" ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதே; அவை ஆகமங் களுடைய அனுமதி **(Sanction)** பெற்றா நடத்தப் பெறு கிறது?

சங்கராச்சாரிகளும், மடத்தலைவர்களும் இன்று காரிலும், ரயிலிலும் பயணம் செய்கிறார்களே அந்த முறை வைதீக சனாதன மார்க்கத்துக்கும் முறைக்கும் முரண்பட்டதல்லவா?

சாதிதர்ம ஏற்பாட்டின்படி வேதம் ஓதுதல்தானே வேதியர்க்கழகு? பிராமணனுக்கு ஓதலும், ஓதுவித்தலும், கற்றலும், கற்பித்தலும் சனாதன சடங்குகளைச் செய்தலுந்தான் குலதர்மப்படி விதிக்கப்பட்ட வேலை என்றாலும், இன்று அவர்களில் பலர், "மிலேச்ச பாஷை"யான இங்கிலீஷைப் படித்து, சட்டம் படித்து மேல்பதவிக்கு வருகிறார்களே! அர்ச்சகப் பார்ப்பானின் மகன் அந்த வேலையைவிட்டு, அய்க்கோர்ட்டிலும், சுப்ரீம் கோர்ட்டிலும் நீதிபதியாக வந்து அமரும் நிலை ஆகம விதிகட்கு, சாஸ்திரங்கட்கு விரோதமானவை அல்லவா?

இந்துமத ஆச்சார அனுஷ்டானப்படி, "கடல் தாண்டக் கூடாது." ஆனால், இன்று படித்த பார்ப்பனர் அதைக் கடைப்பிடிக்கின்றனரா? கடவுளையே கடல்

தாண்ட வைத்து, அமெரிக்காவிற்கு அனுப்பி, விநாயகர் கோயில் அல்லவா கட்டுகிறார்கள் ?

"அவாளுக்கு" வசதி என்றால், ஆகமமும் சாஸ்திரமும் வளைந்துகொடுக்கும். நம் மக்கள் உரிமை பெறுவது, அடிமைத்தனத்தை ஒழிப்பது என்றால், அது "மத விரோதம்; மத அனுஷ்டானத்தில் தலையீடு" என்றால், அதைவிட மானங்கெட்ட நிலை வேறு இருக்கமுடியுமா ?

"ஆகமம்" என்று பிரமாதமாகத் தப்பட்டை அடித்துக்கொள்கிறார்களே அதனைப்பற்றி, "அபிதான சிந்தாமணி" (தமிழில் வெளிவந்த முதல் கலைக்களஞ்சியம் போன்ற நூல் அபிதான சிந்தாமணி) பக்கம் 117ல் ஆகமம் என்ற தலைப்பில் உள்ள விளக்கம் இதோ :—

"சிவ, விஷ்ணுக்களால் இரு ரிஷிகள் பொருட்டு அருளிச் செய்யப்பட்ட நூல்கள். அவற்றுள் சிவாகமம் இருபத்து எட்டு வகை. அவை சதாசிவ மூர்த்தியின் அய்ந்து திருமுகங்களிலிருந்தும் தோன்றின ! அவை சிவபேதம், ருத்திரபேதம் என இருவகைப்படும். அவற்றுள் முதலாவது, காமிகாகமம் (இதனைக் கேட்டோர்) பிரணவர், திரகலர் ஹரர்.....

இனி, வைஷ்ணவ ஆகமங்கள் வைகா நகம், பாஞ்சராத்ரம் என இருவிதப்படும்."

—இவைகளைக் "**கேட்டோர்**" என்று கூறும் ஆசாமிகள் யார் ? எந்த ஆதாரத்தை வைத்து இவைகள் தொகுக்கப்பட்டுள்ளன ? பார்ப்பன ஆதிக்கத்தினைக் கட்டிக்காப்பது போன்ற ஒரு நிலைதானே இதன்மூலம் ஏற்படுகிறது ?

ஆகாயத்தில் உள்ள கோட்டைக்கு, வாசல் முன் புறமா, பின்புறமா? என்று சர்ச்சைக்குப் பதில் தேடுவது போன்ற ஆதாரமற்ற கற்பனைமீது விவாதம் செய்வது போன்ற சொல் அல்லவா ?

காட்டுமிராண்டிக் காலத்து ரிஷிகளும், முனிபுங்கவர்களும் கேட்டதாகக் கூறியதை இனி, சந்திரமண்டலத்தில் தீர்ப்புகட்கு ஆதாரமாக நமது கோர்ட்டுகள் கொள்வது தான் விந்தையிலும் விந்தை!

ரிஷி மூலம், நதி மூலம் பார்க்கக்கூடாது என்று பழமொழி உண்டாக்கியதின் மூலம் எவ்வளவு அருவறுப்பும், ஆபாசமும் கொண்டவைகள் அவைகள் என்பவைகள் காட்டப்பட்டுவிட்டன! அவர்கள் கூறியது என்று அதை இன்று சுட்டிக்காட்டி, சாதியை நிலை நிறுத்த முயற்சிக்கிறார்கள் என்றால், இதைவிடக் கேவலம் வேறு என்ன இருக்கமுடியும்?

சிவ ஆகமம் ஆனாலும், வைஷ்ணவ ஆகமம் ஆனாலும் அவைகள் எப்படி அசல் சாதி தர்மப் பாது காப்புச் சட்டங்களாக (Codes) இருக்கின்றன என்பதை அதிலிருந்து சில பகுதிகளை வெளியிட்டு, நம் வாசகர் கட்குத் தெளிவாய் விளக்கியுள்ளோம்!

இந்நிலையில், ஆகமம், ஆகமம் என்று அதை நாம் ஏதோ 'அத்தாரிட்டி'யாக எடுத்துக்கொள்வது எவ்வளவு பெரிய சமுதாயக் கேடு!

சமதர்மம் பேசும் காலம் இக்காலம்; சோஷலிசத்தை வலியுறுத்தும் காலம் இது. ராஜாக்களை அவர்கள் தெய்வத்தின் நேரிடைப் பிரதிநிதி என்று கருதப்பட்ட காலம் எல்லாம் மலையேறிவிட்ட இன்றைய நிலையில், ராஜாக்கள் ஒழிக்கப்பட்டு, ராஜ மான்யமும், சலுகைகளும் ஒழிக்கப்பட்டுவிட்ட இன்றைய நிலையில், அர்ச்சகர்கள் இன்ன சாதியிலிருந்து, இந்த ஆகமங்களின்படி தான் நியமிக்கப்படவேண்டும் என்று கட்டளை இடுவதைவிட, நம் பிறவி இழிவைப் பாதுகாக்கும் ஏற்பாடு வேறு உண்டா?

தமிழ்ப்பெருமக்கள் ஆழமாகச் சிந்திக்கவேண்டும். ஆகம விதிகள்படி நியமிக்கப்பட்ட அர்ச்சகர்களின் உண்மை யோக்கியதை என்னவென்பதை சர். சி. பி.

இராமசாமி அய்யர் தலைமையில் அமைத்த (1960—'62) இந்து அறநிலைய கமிஷன் அறிக்கையில் உள்ளதை நாளைச் சுட்டிக்காட்டி விளக்குவோம்.

## 2

ஆகமங்கள் என்பவைகள் எப்படி, யாரால் உருவாக்கப்பட்டவைகள் என்பவைகளில் எந்தவிதமான தெளிவும் இல்லை! சாதி ஆதிக்கத்தைக் காப்பாற்றுவதற்காக மேல்சாதிக்காரர்களால் உருவாக்கப்பட்டவைகள் அவைகள். நேற்று இதனைச் சுட்டிக்காட்டினோம்.

அர்ச்சகர்கள் நியமனத்திற்குரிய யோக்கியதாம்சம் எப்படி கேலிக்குரிய ஒன்றாக இருக்கிறது என்பதற்குச் சென்னை அய்க்கோர்ட்டில் சுந்தராம்பாள் அம்மாள் Vs யோகவனக் குருக்கள் என்ற ஒரு வழக்கில், **ஜஸ்டீஸ்** திரு. சதாசிவ அய்யர் அளித்த ஒரு தீர்ப்பில் (1913-ல் ஆதாரம் Law Weekly 1914—பக். 276) காணப்படும் ஒரு வாசகம் போதுமானதாகும்.

"It is a settled custom that females, by reason of their sex, are permanently disqualified from performing the duties of an Archaka in a Saivite temple established both according to Vedic and Tantric rites."

"வேதம் அல்லது தாந்திரீக ஆச்சாரங்களுக்கு இணங்க நிறுவப்பட்ட சைவக்கோயில் ஒன்றில், அர்ச்சகராகப் பணிபுரிவதற்குப் பெண்கள் தங்களின் பெண்மை (பால்) காரணமாக நிரந்தரமாகத் தகுதியற்றவர்கள் என்பது நிலைபெற்றுவிட்ட வழக்கம்."

...Vedic text which related to the disqualification of a lady in the Vedic days by reason of the feebleness of her nervous organization to share in the Soma drink.

—"சோமபானத்தை ஆண்களுடன் பகிர்ந்து குடிக்க முடியாத அளவுக்குப் பெண்ணின் உடம்பில் நரம்பு மண்டல அமைப்புப் பூஞ்சையாக இருக்கின்ற காரணத்தால், வேதகாலத்தில் பெண்களுக்குத் தகுதியின்மையை விதித்தது வேதம்."

இதிலிருந்து தெரிவது என்ன?

வேதங்களின்படி, அர்ச்சகர்கட்குள்ள மிக முக்கிய தகுதி, சோமபானத்தைக் குடித்து, அதனால் ஏற்படும் நரம்புக் கிளர்ச்சியின் வலிமையைத் தாங்கிச் செயல்பட வேண்டிய தகுதி என்பதுதானே!

வைகானச ஆகமத்தில் அர்ச்சகர்கட்குள்ள தகுதி குறிப்பிடுகையில்,

1. அவரது பிரிவுக்கான வேதத்தைச் சரிவரப் படித்துணர்ந்தவராகவும், பிராமணராக்வும் (**Swadya study of the Veda of his sect**) அவ்வேதத்தின் அடிப்படையை உணர்ந்தவராகவும் இருப்பதோடு, விரும்பத்தக்கவராகவும், சிற்றின்ப சம்பந்தமான அவயங்களைக் கட்டுப்படுத்தியவராகவும் (**Who has controlled his sensual organs**) மிகவும் புனிதமாக உள்ளவரும், விஷ்ணுவை எப்போதும் கடவுளாக வழிபடுபவராக மனத்தில் எவ்வித குழப்பமோ, சந்தேகமோ கொள்ளாதவர்களும், மனைவி குழந்தை உடையவராகவும், அமைதியாகவும், முழுமையாகவும் எல்லாவித விரதங்களையும் முழுமையாகக் கடைப்பிடிப்பவராகவும், நேர்மையும், தர்ம சிந்தை உடையவராகவும், எல்லாக் காரியங்களிலும் திறமையாக வழிகாட்டுபவர்களும் இருக்கவேண்டியது மிகவும் அவசியம்!

இதன்படி,

(1) ஒருவர் பிராமணராகவும்,

(2) வேதங்களை நீக்கமற கற்றுணர்ந்தவராகவும்,

(3) பெருமிதமும், விரும்பத்தக்கதாகப் பண்புள்ளவராகவும்,

(4) சிற்றின்ப அவயங்களை அடக்கி ஆளும் தன்மை படைத்தவராகவும்,

(5) நேர்மையும், தர்ம சிந்தை உடையவராகவும் இருக்கவேண்டும்.

இந்த யோக்கியதாம்சங்கள் என்ற உரைக்கல்லில் வைத்து உரைத்துப் பார்த்தால், 100க்கு 99·999 சதவிகித அர்ச்சகப் பார்ப்பனர்கள் அடிபட்டுப் போவார்கள் என்பதைப் பார்ப்பனர்களேகூட மறுக்கமுடியாதே!

சரியாக வேதம் படித்த பார்ப்பனர் எத்தனை பேர்? பாரம்பரியமாக அர்ச்சகர்கள் நியமனம் இருக்கவேண்டும் என்பதும், இத்தகுதிகள் அர்ச்சகர்களுக்கு யோக்கிய தாம்சமாக இருக்கவேண்டும் என்பதும் ஒன்றுக்கொன்று முரண்பாடானதல்லவா?

"தாசி அபரஞ்சி" சினிமாவை எடுத்தது, ஜெமினி வாசன் என்ற பார்ப்பனர்தான். அதில் குருக்களாக நடித்த திரு. கொத்தமங்கலம் சுப்பு ஒரு பார்ப்பனர். நடிக்கவும் ஒரு பார்ப்பன மாதுதானே! அர்ச்சகர்களின் யோக்கியதையை அப்பட்டமா படம் பிடித்துக் காட்டிய கதை அதுதான்.

ஆகம விதிகட்கும், இத்தகைய கோயில்களுக்கும் உள்ள தூரம் "காததூரம்" அல்லவா?

1960-'62ல் இந்தியா முழுவதையும் சுற்றிப் பலரிடம் சாட்சியம் பெற்றுத் தயாரிக்கப்பட்ட சர். சி. பி. இராமசாமி அய்யர் தலைமையிலான இந்து அற நிலையக் கமிஷன் அறிக்கையிலிருந்து நாம் மொழி பெயர்த்து வெளியிடும் அதில் அர்ச்சகர்கள் எவ்வளவு தற்குறிகளாகவும், ஒன்றும் தெரியாதவர்களாகவும்

இருக்கிறார்கள் என்று மிகவும் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டப்பட்டிருக்கிறதே!

இவ்வளவு விபரத்திற்குப் பின்னரும், கல்வி யோக்கியதாம்சம் ஏதும் தேவையில்லாமல் அந்தந்தப் பிரிவு, உபபிரிவு இவற்றிலிருந்து சிவ ஆகமம், வைஷ்ணவ ஆகமம் இவைகளின்படிதான் அர்ச்சகர்கள் இருக்க வேண்டும் என்று கூறுவது எவ்வளவு கடைந்தெடுத்த பித்தலாட்டம்.

அர்ச்சகர் நியமனத்தில் பாரம்பரிய பாத்தியதையை கொண்டாட முடியாது என்று சுப்ரீம்கோர்ட் ஒப்புக் கொண்டுவிட்டதே! அதுவே ஆகமத்திற்கு விரோதம் தானே!

வைகனாச ஆகமத்தில் (சுப்ரீம்கோர்ட்டில் மனு தாரர்கள் தாக்கல் செய்த ஆதாரம் அது) :—

"In case of the absence of the acharya (the preceptor) any such rite should be performed having preceptor's son or his grandson (son's son) or his great grand son or anyone born in his Vasma (family)."

"ஆச்சாரியார் (மதகுரு) அங்கே ஆஜராக இல்லாமல் இருக்கும்பட்சத்தில், இத்தகைய சடங்குகள் மதகுருவின் மகனையோ அல்லது பேரனையோ (மகனின் மகன்) அல்லது கொள்ளுப் பேரனையோ அல்லது அவரது வம்சத்தில் பிறந்த யாராவது ஒருவரையோ வைத்து நடத்தப்படவேண்டும்."

இதன்படி பாரம்பரிய வம்சாவளியிலிருந்து நழுவக் கூடாதே. அதை அனுமதிக்கும் சுப்ரீம்கோர்ட், பிறகு எப்படி மற்றவர்கள் தொட்டால் சிலை தீட்டாகிவிடும்? புனிதத்தன்மை கெட்டுப்போகும் என்றெல்லாம் கூறுகிறது! அது வலிந்து வியாக்யானம் செய்து, வேண்டு

மென்றே சாதி தர்மத்தைக் காப்பாற்றும் ஏற்பாடு அல்லாமல், வேறு என்ன ?

பார்ப்பன ஆதிக்கம் இன்னமும் எவ்வளவு கொடூர மான "அக்டோபஸ்" (எட்டுக்கால் கோரப் பிராணி) ஆக பரவியிருக்கிறது என்பதற்கு இதற்குமேலும் எடுத்துக் காட்டு வேண்டுமா ?

[20-3-'72, 21-3-'72 'விடுதலை' தலையங்கம்]

---

## தகுதிக்கு மேற்பட்ட பலன் அடையும் பேராசையே காரணம்

கடவுளைப்பற்றிக் கற்பித்தவர்கள் யாரானாலும் தாய், தந்தையார், குரு, சமயங்கள், நூல்கள் எதுவானாலும் கடவுளை வணங்கினால் நலம் பெறலாம் என்கின்ற ஒரு இலட்சியத்தை அடிப்படையாக வைத்தே புகுத்தி இருக்கிறார்கள் என்பதோடு, தாங்களும், மற்றவர்களுக்குப் புகுத்தியவர்களும் கடவுளை நம்பினால், வழிபட்டால், பிரார்த்தித்தால் தங்களுக்கு வேண்டிய நலன்கள் கிடைக்கும்; கிடைக்கலாம் என்ற நம்பிக்கையுடனே இருக்கிறவர்களாவார்கள். மற்றும், தங்கள் தவறு மன்னிக்கப்படும்; தங்கள் தகுதிக்குமேல் பலன் அடையலாம் என்பவையான எண்ணங்களே, ஆசைகளே, பேராசைகளே நம்பிக்கைக்கும், வழிபாட்டிற்கும், தொண்டிற்கும் காரணமாக இருக்கிறது.

**—தந்தை பெரியார்.**

## தமிழ்ப் பெருமக்களே,
## கோயிலுக்குப் போகாதீர்!

தமிழ்நாட்டில் கோயில்கள் எனப்படுபவை வெறும் பக்திக் கேந்திரங்களாக இல்லை. இந்துமதம் என்ற பார்ப்பன மதத்தில்தான் அர்ச்சகர் என்பவர் உயர்சாதிக் காரராகவும், பரம்பரை பரம்பரையாகத் தொடர்ந்து வருபவனாகவும் இருக்கும் நிலை உள்ளது. இதிலிருந்து தெரிவது என்ன? கோயில்கள் என்பவையும், அதிலுள்ள கர்ப்பகிரகம், மூலஸ்தானம் அதிலுள்ள சிலை இவைகள் சாதிதர்மத்தையும், வர்ணாசிரமக் கொடுமையையும் என்றென்றும் நீடிக்க, நிலைக்கவே செய்யப்பட்ட ஏற்பாடு என்பதையும் அது காட்டவில்லையா?

ஆண்டவன் அனைவருக்கும் சொந்தம்; அனைவரும் அவரது பிள்ளைகள் என்று ஆத்திகர்கள் கூறும் கூற்று மெய்யானால், மணியடிப்பதற்கும், பூசை செய்வதற்கும் மட்டும் ஏன் ஒரு தனி சாதி—அதுவும் தன்னை உயர்ந்த சாதி என்று ஆணவத்துடன் அழைத்துக்கொள்ளும் ஒரு சாதி ஏன் இருக்கவேண்டும்?

இந்துமதம் என்பதற்கு எப்படி ஒரு வரைமுறை, தெளிவான கோட்பாடு விளக்கங்கள், கொள்கைகள், நடைமுறைகள் இல்லையோ, அதுபோலவேதான் இக் கோவிலுக்குள் நுழைவது. "சாமி" சிலைவரை செல்வது, தொடுவது என்பதுபற்றியும் திட்டவட்டமான வரையறை ஒருமாதிரி கிடையாது!

எடுத்துக் காட்டாக, கர்ப்பகிரகம் என்ற கருவரைக்குள் மற்றவர்கள் சென்றால், 'சாமி' தீட்டாகி விடும். பிறகு, கடவுளுக்குச் "சம்புரோட்சணம்" செய்து, சுத்தப்படுத்தவேண்டும் என்று அலறும் சனாதனப் பார்ப்பனர்களைக் கேட்கிறோம்:

இது எல்லாக் கோயில்களுக்கும், வழிபாடு நடத்தப் பெறும் அத்தனை விக்கிரகங்களுக்கும் ஒரே மாதிரியாக இருக்கவேண்டாமா? இன்று அப்படி இருக்கிறதா?

காசியில் உள்ள விசுவநாதர் ஆலயத்தில்—புண்ணியம் பெறுவதற்கும், செய்த பாவங்களைப் போக்குவதற்கும் சனாதனிகள் தேர்ந்தெடுக்கும் இடம் காசிதானே!—உள்ள நடைமுறை என்ன? எவர் வேண்டுமானாலும் அந்தச் சிலையான கல் இருக்கும் இடம்வரைப் போய் விட்டு, வில்வத்தையோ, மற்றும் பூக்களையோ போட்டுப் பூசை செய்துவிட்டு, தொட்டுக் கும்பிட்டு விட்டுத் திரும்புகின்றனரே! மனிதர்கள் மட்டுமல்ல· பசுமாடுகூட அங்குக் கொண்டுவரப்படுகிறது (நாமே நேரில் அதனைக் கண்டோம்) அங்குள்ள கடவுள் மட்டும் ஏன் தீட்டாகிவிடுவதில்லை?

காசி மட்டுமல்ல; வடநாட்டு மிக முக்கிய க்ஷேத்திராடனக் கோயில்களான பிரசித்திப் பெற்ற பண்டரிபுரம், பூரி ஜெகநாதம் கோயில்களிலும் சிலை இருக்கும்வரை எவரும் சென்று தொட்டுக் கும்பிட்டு வணங்கலாமே! அங்கு மட்டும் ஏன் சாமி தீட்டாகி விடுவதில்லை?

வடநாட்டுக் கோயில்களை விட்டுவிடுவோம். இங்குள்ள கோயில்களில் கர்ப்பகிரகத்திற்குமுன் பல 'சின்ன கடவுள்கள்' உள்ளனவே, அந்த விக்கிரகங் களைத் தொடவும், தொட்டுப் பூ வைக்கவுமான காரியங்கள் செய்கின்றனரே; அவைகள் ஏன் தீட்டாகி விடுவதில்லை?

குளக்கரைகளிலும், மரத்தடிகளிலும், பிளாட் பாரங்களிலும், நடைப்பாதைகளிலும் திடீர் திடீர் என கடவுள் சிலைகள் தோன்றி, கோயில்களாக மாறு கின்றனவே, அவைகளை மனிதர்கள் மட்டும் வணங்க வில்லை; பல நேரங்களில் அவைமீது செய்யப்பட்ட பாலாபிஷேகம், தேனாபிஷேகம் சுவை கண்ட நாய்

களும் சென்று நக்குகின்றனவே, அவை எப்படித் தீட்டாகாமல் இருக்கின்றன ?

அவைகளுக்கெல்லாம் தினசரி "சம்புரோட்சணம்" நடத்தப்படுகின்றனவா ? புனிதத் தன்மை இழந்துவிட்ட வெறும் கற்கள் என்று எந்தப் பார்ப்பானும், பக்தனும் கூறுவதில்லையே ஏன் ? மதம், கோட்பாடு என்றால், அதற்குச் சீர்மை—(Uniformity)—வேண்டாமா ? எத்தனையோ இடங்களில் மரத்தடி, ஊர் முச்சந்திகளில் லிங்கங்கள் இருக்கின்றனவே அவைகளை நாய்களும், மற்ற நாலு கால் பிராணிகளால் எவ்வளவு அசிங்கப் படுத்தி நடந்துகொள்ள முடியுமோ, அவ்வளவு செய் கின்றனவே அதுபற்றிப் பார்ப்பனரோ, பக்தரோ இது வரை எடுத்தத் தடுப்பு நடவடிக்கைதான் என்ன ?

பெரிய கோவில் என்றால், அவ்வளவும் பார்ப்பான் கொழுப்பதற்கும், அவனது சாதி ஆணவம் நிலை நாட்டப்படுவதற்கும்தானே !

கிராமங்களிலும், நகரங்களிலும் உண்டாகும் திடீர்க் கோயில்களின் வரலாற்றைப் பார்த்தால் தெரியுமே ! வருவாய் இல்லாத கட்டத்தில் பார்ப்பன அர்ச்சகர் புகமாட்டார். வருவாய் பெருக ஆரம்பித்த வுடன், மெல்ல மெல்ல நுழைந்து, கர்ப்பகிரகத்தைப் பூணூல் திருமேனிகள் ஆக்கிரமித்துவிடுவார்கள்! பிறகு, 'ஸ்தல புராணம்' உருவாகும். பிறகு, அந்தச் சிலைக்கு 'ஸ்யம்பு' மகத்துவம் எல்லாம் கற்பிக்கப்பட்டுவிடும் !

பார்ப்பன ஆதிக்கம் பலமாகப் பாதுகாக்கப்படும் இடம், இன்றுள்ள நிலையில் கோயில்கள்தான்.

பார்ப்பனத் தலைவர்களான சங்கராச்சாரியாரும், ராஜகோபாலாச்சாரியாரும் பக்தியைப் பரவச்செய்ய வேண்டும் என்று ஒற்றைக் காலில் நிற்பதும், தவியாய்த் தவிப்பதும் எதற்காக ? இதற்காகத்தானே !

"வைக்னேச ஆகம விதி"யில் உள்ள ஒரு பகுதி எப்படி சாதியைப் பாதுகாக்கிறது என்று இதே புத்தகத்

தில், 24ஆம் பக்கத்தில் வெளியிடப்பட்டிருக்கிறது! சாதியைப் பாதுகாக்கக் கோயிலும், கர்ப்பகிரக விக்கிரமும் எப்படிப் பயன்படுகிறது என்பதற்கு இதை விடத் தெளிவான ஆதாரம் வேறு தேவையா?

அதில் பிராமணன் தொட்டால்கூடத் தீட்டு என்று இருக்கிறதே என்று சொல்லி, சிலர் இதைத் திசைதிருப்ப முயற்சிக்கலாம். பார்ப்பன சூழ்ச்சி, நரித்தந்திரம் அதில் தான் அடங்கி இருக்கிறது! அர்ச்சகன் அதே சாதியான தால், அவர்களைப் பொறுத்து ஒரு குறிப்பை அதில் இணைத்துக்கொள்வதால் அவர்களுக்கு நட்டம் ஏதும் இல்லை. பொதுவாக, அனைவருக்கும் தடைவிதிக்கப் பட்டுள்ளதுபோல் ஒரு பிரமை ஏற்படுத்த அது உதவும் என்பதால்தான் அதனைப் புகுத்தியுள்ளார்கள்.

அதில் கவனிக்கப்படவேண்டியது, நாலு சாதி யினரும், நாலாஞ் சாதியினரும் இழிந்த 'அனுலோம சாதி'யினருக்கும் அதில் தனித்தனியாகக் குறிப்பிட் டிருப்பதும், பிராமணரால் தீட்டு ஏற்பட்டால், வெறும் தண்ணீர் ஊற்றிவிட்டால், சிலை மீண்டும் புனிதமாகி விடும் என்பதும், அதே காரியத்தை க்ஷத்திரியன் செய் தால் 7 கலசம் வைக்கவும், வைசியன் செய்துவிட்டால் 24 கலசமும், சாந்திஹோமமும், பிராமணர்கட்குப் போஜனமும் நடத்தப்படவேண்டுமென்றும், சூத்திரன் செய்துவிட்டால் 108 கலசமும், மகாசாந்திஹோமமும், பிராமணப் போஜனமும் செய்விக்கப்படவேண்டும் என்பதும் சாதி தர்மத்தைக் கட்டிக்காக்கும் ஏற்பாடு அல்லவா?

'தீட்டு' பட்டது என்றால், அதற்குப் பரிகாரம், பிராயச்சித்தம் சாதிக்கு சாதி வேறுபடுவானேன்?

சுப்ரீம்கோர்ட்டில்கூட பார்ப்பனர்கள்—இன்றைய சந்திரமண்டலப் பயண யுகத்திலும் இதைத்தானே சுட்டிக்காட்டுகின்றனர்?

இதை ஏற்றுக்கொண்டால், நாம் காலம் உள்ள வரை கடைசாதி, சூத்திர மக்கள்தானே? "சூத்திரனுக்

கொரு நீதி, தண்டச் சோறுண்ணும் பார்ப்பானுக்கு வேறு ஒரு நீதி'' இச்சாத்திரம் சொல்லுகிறதே! இது சாத்திரம் அல்ல; சதி என்று கண்டறியவேண்டாமா? உணர்ந்து ஒப்புக்கொண்டு தகுந்த பரிகாரம் காண வேண்டாமா?

எனவே, தந்தை பெரியார் அவர்கள் தமிழர் சமுதாயத்தைப் பார்த்துக் கூறுகிறார் :— "தமிழா, உன்னை இழிசாதியாக்கும் ஏற்பாடான கோயிலுக்குள் நுழையாதே! அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்ததாக நீ சொல்லும் ஆண்டவனை வணங்கக் கோயிலுக்குத்தான் போய் ஆகவேண்டும் என்பது என்ன கட்டாயம்?'' என்று கேட்கிறார்!

பக்தியின் பேரால், மானத்தை அடகுவைத்து விடாதீர்கள் தமிழர்களே! பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இருந்துவந்த இழிநிலை, இந்த இருபதாம் நூற்றாண்டிலாவது மாற வேண்டாமா? மறைய வேண்டாமா? தந்தை பெரியார் அவர்களது சகாப்தத்தில் நாம் தன்மானத்தையும், உரிமையையும் பெறவில்லையானால், வேறு எப்போது பெறமுடியும்? சிந்தியுங்கள்.

கோயில்கள் அப்படி என்ன ஒழுக்கக்கூடங்களா? இல்லையே! பக்தி நிறைந்த காந்தியார், பச்சையாகப் படம்பிடித்துக் காட்டினாரே! "கோயில்கள் விபச்சார விடுதிகள்'' என்று அவர் கூறவில்லையா?

அந்த விபச்சார விடுதிக்கு நீங்கள் செல்லலாமா? உங்கள் மனைவி, மக்கள், உறவினர்கள் செல்லலாமா? அறிவையும், மானத்தையும், பொருளையும் பறிமுதல் செய்யும் கூடங்களுக்குச் செல்வதைத் தவிர்க்க வேண்டாமா?

தமிழர்களே, மான வாழ்வு பெற இந்தக் குறைந்த பட்ச பத்தியத்தையாவது கடைப்பிடிக்கத் தவறாதீர்கள்! தவறவே தவறாதீர்கள்!!

[14-3-'72 'விடுதலை' தலையங்கம்]

# கோவில் பகிஷ்காரம் தமிழனுக்கு அவசரத் தேவை

அர்ச்சகர்கள் நியமனம் சம்பந்தமாகச் சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்புப்பற்றி நாம் மிகவும் விளக்கமாக எழுதியிருந்தோம். 'ஆபரேஷன் வெற்றி; நோயாளி செத்தார்' என்று உதாரணம் காட்டியிருந்தோம்.

இந்த ரிட் மனுக்களுக்கு மூலாதார காரணஸ்தரும், உற்சாகமும் ஊக்கமும் தந்துகொண்டிருந்த மூலவரு மான ஆச்சாரியார் அவர்கள், இவ்வாரக் 'கல்கி' ஏட்டில் அதனைச் சுட்டிக்காட்டி, தம் இனத்தின் வெற்றியை மகிழ்ச்சி பொங்கக் காட்டியுள்ளார்.

> "அர்ச்சகர்கள் போட்ட ரிட் விண்ணப் பங்களைச் சுப்ரீம்கோர்ட்டார் தள்ளிவிட்டார் கள் என்ற சுருக்கமான செய்தியைப் பத்திரிகை களில் வாசகர்கள் படித்திருக்கலாம். பரம்பரை பாத்தியதைப்பற்றிச் சுப்ரீம்கோர்ட்டாருடைய அபிப்பிராயம் இது என்ற அளவில் இந்தச் செய்தி சரியானதே! ஆனால், 'ஹிந்து' பத்திரிகை (15-3-'72) 10-ம் பக்கத்திலும், இந்தியன் எக்ஸ்பிரஸ் (16-3-'72) 10-ம் பக்கத் திலும் சுப்ரீம்கோர்ட்டாருடைய முழுத் தீர்ப்பும் வெளியாகி இருக்கிறது. இதைப் படித்தால்தான், சுப்ரீம்கோர்ட்டார் தீர்மானத் தின் முக்கியமான விஷயங்களை அறிய முடியும். எந்தக் கோயிலிலும் சம்பிரதாயத் திற்கு விரோதமாக அர்ச்சனையோ, வேறு பூஜை சடங்கோ செய்வதற்கு இடமில்லை. அப்படிச் செய்யும்படித் தமிழ்நாட்டு சர்க்கார் ஏதாவது விதிகள் ஏற்படுத்தியிருந்தால், அவை செல்லாது என்று தெளிவாகச் சுப்ரீம் கோர்ட் டார் தீர்மானித்திருக்கிறார்கள். அந்தந்தக்

கோயிலின் சம்பிரதாயத்துக்கு எந்தவிதத்திலும் மாறுதல் செய்து, உத்தரவுகள் பிறப்பிக்க சர்க்காருக்கு அதிகாரம் இல்லை என்று சுப்ரீம் கோர்ட்டார் தீர்ப்பில் தெளிவாக எழுதியிருக்கிறார்கள்.''

பார்ப்பன சமுதாயத்தின் தனிப்பெரும் தலைவரும், பாதுகாவலருமான பச்சை வர்ணாசிரமவாதியான ஆச்சாரியாரின் பேனா எவ்வளவு மகிழ்ச்சியுடன், 'காளிங்கநர்த்தனம்' ஆடியிருக்கிறது பார்த்தீர்களா ?

இங்கிலீஷில் ஒரு சொற்றொடர் Pyrric Victory என்று உண்டு. 'தோல்விக்குச் சமமான வெற்றி' என்று அச்சொற்றொடருக்குப் பொருள். அந்த நிலை சுப்ரீம் கோர்ட் தீர்ப்பின்மூலம் தமிழ்நாடு அரசுக்கு ஏற்பட்டது என்பதை நாம் ஒப்புக்கொள்ளத் தயங்கி, அதற்குத் திரிபுவாதம் செய்து, நம்மை நாம் திருப்திப்படுத்திக் கொள்வோமானால், அதைவிடப் பெருத்த ஏமாற்றம் நமது சாதி ஒழிப்பு லட்சியப் பணிக்கு வேறு இருக்கவே முடியாது !

ஆச்சாரியார் மட்டுமல்ல; அக்கிரகாரமே, காந்தியாரைப் பார்ப்பனர் கோட்சே சுட்டுக் கொன்ற செய்தி கேட்டுப் பூரித்து, இனிப்பு வழங்கி மகிழ்ந்ததுபோல, இத்தீர்ப்பின் முழு விவரம் கண்டு மகிழ்ச்சியால் மிதக்கிறார்கள்.

தம் இனத்தவர் ஆதிக்கம், சாதியின் உயர்நிலை காக்கப்பட என்ன செய்யவேண்டும் என்று விரும்பினார்களோ அது கிடைத்துவிட்டது. அவர் கேட்டது ரொட்டி; கிடைத்தது கல் அல்ல, அசல் ரொட்டியே தான் !

பார்ப்பன இனத்தவர்கட்கு சாதி ஆதிக்கத்திலுள்ள குறி எவ்வளவு என்பதற்கு இதோ மற்றுமோர் எடுத்துக் காட்டு. மதுரையிலிருக்கும் ஒரு வக்கீல் பார்ப்பனரும் இதே கருத்தை 23-3-'72 'இந்து' ஏட்டில் அவாளது

'குருசேத்திர'மான ஆசிரியர் கடிதப் பகுதியில் எழுதியிருக்கிறார்! அக்கடிதத்தின் பகுதி இதோ:—

"Though the denial of the right of succession to archakaship by the amended statute has been upheld by the Court, it is not serious matter for the worshiping public as the denominational principle has been upheld in making appointments."

"...Now the petitioners have lost their case. The government has failed to achieve its object of doing away with the caste limitations in appointing Archakas. It is the worshiping public that emerge unscathed in this controversy."

("திருத்தப்பட்ட சட்டத்தின்மூலம் அர்ச்சகர் பதவிக்கான பரம்பரை உரிமை மறுக்கப்பட்டது, கோர்ட்டினால் செல்லுபடியாக்கப்பட்டபோதிலும், வழிபாடு நடத்தும் பொதுமக்களுக்கு அது ஒன்றும் 'சீரியஸான' விஷயமல்ல. ஏனென்றால், அர்ச்சகர் பதவிக்கு நியமனம் செய்வதில் இன்ன பிரிவினர்தான் நியமிக்கப்படவேண்டும் என்ற கொள்கையைக் கோர்ட் செல்லுபடியாக்கி யிருக்கிறது."

"...இப்போது மனுதாரர்கள் தங்கள் வழக்கில் தோல்வியடைந்திருக்கிறார்கள். ஆனால், அர்ச்சகர்களை நியமிப்பதில் உள்ள சாதி வரம்பை ஒழித்துக்கட்டும் தனது லட்சியத்தை அடைவதில் அரசும் தோல்வியே அடைந்திருக்கிறது. இந்தச் சிக்கலில் கொஞ்சம்கூடப் பாதிக்கப்படாமல் வெளியேறியிருப்பது வழிபாடு நடத்தும் பொதுமக்கள்தான்.")

இத்தீர்ப்பில் 'அவாளுக்கு' எவ்வளவு புளகாங்கிதம் ஆணவம்தெறிக்கும் பூரிப்பு என்பது கண்டு, சாதி ஒழிப்பு உணர்வுள்ள நாம் அனைவரும் வெட்கித் தலை குனிய வேண்டாமா?

நம்மிடம் பெரும்பான்மை உள்ள ஓர் ஆட்சி செய்த சட்டத்தையே இப்படி, 'சற்றே விலகியிரும் பிள்ளாய், சந்நிதானம் எங்கள் சாதிக்கு மட்டும்தான்' என்று புதுப் பாட்டுப் பாடும் அளவுக்கு இன்று அவர்கள் நிலை இருக்கிறது என்றால், மானமுள்ள பக்தர்களே, தமிழ்ப்பெரும் மக்களே, நீங்கள் கடவுள் பக்தி என்ற பேரால், அத்தகைய கோயில்கட்குச் சென்று, எட்டி நின்று 'சூத்திர'ப் பட்டத்தை இன்னமுமா, இந்த இருபதாம் நூற்றாண்டிலுமா சுமக்கவேண்டும்?

கடவுளை வணங்கும் பக்த சிகாமணிகளே, கடவுள்தான் அங்கு, இங்கு எனாதபடி இருப்பவரா யிற்றே, உங்கள் வாதப்படி—அவரை வணங்க, சாதி காக்கும் பார்ப்பன ஆதிக்க இரும்புத்தளை உள்ள கோயில்கட்குப் போய், தன்மானத்தை இழக்கலாமா?

பக்தியின் பேரால் மனிதத்தன்மை, தன்மானத்தை இழக்கலாமா? சிந்தியுங்கள், சிந்தியுங்கள்.

கடவுளும், கோயிலும் பார்ப்பனருக்கு சாதி காப்பாற்றும் கருவிகள் என்ற தந்தை பெரியாரின் பொன் மொழிக்குப் பொருள் இப்போதாவது விளங்குகிறதா? அருள்கூர்ந்து சிந்தியுங்கள்!

[25-3-'72 'விடுதலை' தலையங்கம்]

———

# மத சுதந்திர உரிமையா ? சாதி தர்ம பாதுகாப்பா ?

## 1

இந்திய அரசியல் சட்டம் என்பது மனுதர்மத்தின் மறுபதிப்பாகும் என்பதை நாம் நீண்டகாலமாக எடுத்து விளக்கி வந்திருக்கிறோம். உலகில் எங்குமில்லாத சாதிக் கொடுமையாகிய பிறவி இழிவு நம்மில் பெரும் பாலோரை அலைக்கழித்துக்கொண்டு இருக்கிறது. அதனை ஒழிப்பதற்கு நமது இயக்கம் இந்தியத் துணைக் கண்டத்தின் நீண்ட நெடிய வரலாற்றில் வேறு எந்த இயக்கமோ, அமைப்போ துணியாத வகையில், சாதி ஒழிப்பிற்காகவும், சமுதாய நீதிக்காகவும் தன்னை முற்றிலும் அர்ப்பணித்துக் கொண்டுள்ளதொரு இயக்க மாகும்.

நோய் நாடி, நோய்க்கு மூலகாரணமாக உள்ள அடிப்படைக் காரணத்தையும் ஆராய்ந்து, அதற்காகச் சாவையும் தலைமேற்கொண்டு உழைப்பது என்ற முடிவு எடுத்துக்கொண்டுள்ள இயக்கம் என்பதால், தடைகள் கடவுள் உருவத்திலோ, மத ரூபத்திலோ, சாஸ்திர, சம்பிரதாய ரூபத்திலோ, சட்ட ரீதியாகவோ— எப்படி இருந்தாலும் அவைகள் அகற்றப்படவேண்டும் என்பதில் நாம் தீவிரமாக இருக்கிறோம்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகள்,எவ்வளவு தான் சிறப்பாகச் செயல்பட்டாலும், சட்டங்களை ஒரு மனதாக நிறைவேற்றினாலும் அவைகளை அரசியல் சட்டத்தின் ஜீவாதார உரிமைகளுக்கு முரணாக இருப்பதால், செல்லுபடியற்றவை என்று கோர்ட்டுகள் தீர்ப்புகள் வழங்கி, நொடியில் எச்சீர்திருத்த சட்டத்தை யும் எளிதில் ஒழித்துவிட இன்றைய அரசியல் சட்டத்தில்

வசதியான பாதுகாப்பு, பார்ப்பனர்களால் முன்கூட்டியே திட்டமிட்டு செய்யப்பட்டிருக்கிறது!

மத சுதந்திர உரிமை, மத பாதுகாப்பு உரிமை என்ற சாக்கை வைத்துக்கொண்டு நம் நாட்டு சாதி இழிவை நிலைநிறுத்த ஏராளமான வாய்ப்புகள் உள்ளன.

அரசியல் சட்டத்தின் 25, 26வது விதிகளும், அதன் பிரிவுகள், உட்பிரிவுகள் ஆகியவைகளும் பிற்போக்கு வாதிகளுக்கும், சமுதாய ஆதிக்கவாதிகளான பார்ப்பனர்கட்கும் சரியான பாதுகாப்புக் கேந்திரங்களாகும். அந்த ஷரத்துக்களைக் காட்டி அய்க்கோர்ட்டிலும், சுப்ரீம் கோர்ட்டிலும் பார்ப்பனர்கள், "கஜேந்திர மோட்சம்" தேடுவதற்கு ஓய்வதில்லை; ஒழிவதில்லை.

இந்திய அரசியல் சட்டத்தின் 25வது ஷரத்தின்படி, பொது ஒழுங்கு, ஒழுக்கம், சுகாதாரம் ஆகியவைகளுக் கும், இந்தப் (ஜீவாதார உரிமை) பகுதியிலுள்ள இதரப் பிரிவுகட்கும் கட்டுப்பட்டு, அவரவர் மனச்சாட்சிப்படி நம்பவும், மதத்தைக் கொள்ளவும், பயிற்சிக்கவும், பிரபலப்படுத்தவும் சுதந்திரம் உண்டு.

(a) இதன் 2வது பிரிவின்கீழ் மதச்சார்பற்ற காரியங்களைப் பொருளாதார, நிதித்துறை மற்றும் அரசியல், பொதுத்தன்மை வாய்ந்த அளவில் கட்டுப் படுத்தவோ, ஒழுங்குபடுத்தவோ, தனிச்சட்டம் இயற்று வதையோ,

(b) சமுதாய நலனுக்காகவும், சீர்திருத்தத்திற் காகவும், அல்லது பொதுத்தன்மை வாய்ந்த இந்துமத ஸ்தாபனங்களை, இந்துமதத்தின் எல்லா வகுப்பு, பிரிவினருக்குத் திறந்துவிடுவதற்காகவோ, வழிவகை செய்யும் தனிச்சட்டம் இயற்றுவதையோ,

இச்சட்டத்தின் எந்தப் பகுதியும் பாதிக்காது."

அதுபோலவே 26வது ஷரத்து,

"பொது ஒழுங்கு, ஒழுக்கம், சுகாதாரம் ஆகியவைகட்கு உட்பட்டு,

ஒரு மதகோஷ்டியோ, பிரிவோ,

(a) மத சம்பந்தமான அல்லது தரும சம்பந்தமான காரியங்களை, அமைப்புகளை ஏற்படுத்தவும், நிர்வகிக்கவும்,

(b) மத சம்பந்தமான விஷயங்களைச் சொந்த முறையில் அவைகளே நிர்வகித்துக்கொள்ளவும்,

(c) அசையா சொத்துக்களைச் சொந்தமாக வைத்துக்கொள்ளவும், வாங்கவும்,

(d) சட்டப்படி அவைகளைப் பரிபாலிக்கவும் உரிமை உடையவர்களாவார்கள்.

இந்த 26வது பிரிவில் உள்ள, "மத விஷயங்களைச் சொந்த முறையில் தாங்களே நிர்வகிக்கவும்" (To manage its own affairs in matters of religion) என்ற உரிமையைத் தங்களது 'துருப்புச் சீட்டாக' பார்ப்பனரும், பழமையாளர்களான வைதீக ஆதிக்கச் சக்திகளும் பயன் படுத்தி வருகின்றன!

25வது ஷரத்தில் 2 (B) பிரிவில் உள்ள சமூக நலன், சீர்திருத்தம் இவைகளுக்காகச் சட்டம் செய்வது என்பது பொதுஉரிமைக்கு விதிவிலக்குப்போல அறிவிக்கப் பட்டிருக்கிறது என்ற போதிலும்கூட, சட்டம் என்பது பெரிதும் கோர்ட்டுகளின் வியாக்யானத்தைப் பெறுத்தது என்பதாலும், கோர்ட்டுகளில் இன்னமும் பார்ப்பன வைதீக ஆசாமிகளே நீதிபதிகளாக உட்கார்ந்து, தமது வசதிபோல், தமது நம்பிக்கைக்கும் ஆசைக்கும் ஏற்ற வகையில், தீர்ப்புகள் வழங்கும் வாய்ப்புகளும் சூழ் நிலையும் சர்வ சுதந்திரமாய் இன்று இருக்கின்ற

R 34

காரணத்தாலும், எவ்வளவு பெரிய முற்போக்கு அரசாங்கத்தாலும்கூட தீவிரமான வகையில் சாதி ஒழிப்புக்கோ, சமுதாய சீர்திருத்தத்திற்கோ "Matters of Religion—மதம் சம்பந்தமான காரியங்கள்" என்பவைகள் எவை எவை என்பதை வியாக்யானப்படுத்தும் பொறுப்பு கோர்ட்டுகளுக்குத்தானே இருக்கிறது!

கோர்ட் நீதிபதிகளில் பலர்—அது சுப்ரீம்கோர்ட் டானாலும் சரி, அய்க்கோர்ட்டுகள் ஆனாலும் சரி—வெளிப்படையாக, பஜனைக்கூடத் திறப்புவிழா முதல், பார்ப்பனத் தலைவர் சங்கராச்சாரிக்குப் பாதபூஜை செய்யும் காரியம் வரை, அவற்றில் வெளிப்படையாகக் கலந்துகொள்ளத் தவறுவதே இல்லை!

இந்நிலையில், சட்டத்தின் மத சுதந்திர விதிகட்கு, வியாக்யானம் அத்தகையவர்களால் செய்யப்பட்டால் அது எப்படி அமையும் என்பதைக் கூறவா வேண்டும்?

மதச்சார்பின்மை என்ற தத்துவத்தைப் புதை குழிக்கு அனுப்பிவிட்டு, அதன்மீதுதான் நீதிமன்றம் நாற்காலியைப் போட்டு அமர்ந்துகொண்டு பரிபாலிக் கும் இக்கட்டான நிலை இருக்கிறது!

அது மட்டுமல்ல; எது மதம், எது மத சம்பந்தமான காரியமல்ல என்று வரையறுத்துக் கூறமுடியாத வகை யில் அல்லவா இந்துமதம் என்ற பார்ப்பன மதம் இருக் கிறது!

சங்கராச்சாரியார் உட்பட, "இந்தும்தம் என்ற ஒரு மதமே கிடையாது. அதற்கு வேத மதம் என்று பெயர்; அதற்குக் காலமோ, குறிப்பிட்ட மத நூலோ, குறிப் பிட்ட அனுஷ்டானங்களோ இல்லை" என்கின்ற தன்மையில் கூறிவிட்ட பிறகும் இந்துமதத்தின் காரி யங்கள், மத விஷயங்கள் என்று எவைகளைக் குறிப்பது? அதற்குச் சரியான ஆதாரம்தான் என்ன? எவராவது சுட்டிக்காட்ட முடியுமா?

கடவுள் நம்பிக்கையற்ற ஒரு நாஸ்திகன், முஸ்லீமாகவோ, கிறிஸ்தவனாகவோ இருக்கமுடியாது. ஆனால், கடவுள் நம்பிக்கையற்ற ஒரு நாஸ்திகன் தன்னை அவ்வாறு பிரகடனப்படுத்திக்கொண்டும், "இந்து"வாக இருக்கமுடியுமே! இதற்கு மதவாதிகளின் பதில் என்ன?

நாஸ்திகம் என்பது மத விஷயமா? மத விஷயத்திற்கு அப்பாற்பட்டதா? இந்து பண்டிதர்களோ, மத வாதிகளோ, "மதம்"பிடித்த நீதிபதிகளோ இக்கேள்விக்கு என்ன பதில் கூறமுடியும்?

இந்துமதத்தைப் பொறுத்தவரை—அது சாதி தர்மத்தைக் காப்பாற்றுவதற்காகவே உண்டாக்கப்பட்ட ஆரிய தர்ம பாதுகாப்பு மதமாக இருக்கிற காரணத்தினால் உண்பது, உடுப்பது முதல் எதனையும் "மத விஷயங்கள்" மதக் கட்டளைப்படி இவைகள் இன்னபடி நடக்கவேண்டிய மதக் காரியங்கள் என்று வியாக்யானப் படுத்திவிடலாம்.

இந்திய அரசியல் சட்டத்தை எழுதிய குழுவின் தலைவரான டாக்டர் அம்பேத்கார் அவர்கள் இது சம்பந்தமாக முற்றிலும் தெளிவானதொரு எச்சரிக்கையை அரசியல் நிர்ணயச் சபையிலே அப்போது தந்துள்ளார்.

"The religious conceptions in this country are so vast that they cover every aspect of life from birth to death. There is nothing which is not religion and if personal law is to be saved I am sure about it that in social matters we will come to a stand still."

"இந்த நாட்டில் மதக் கோட்பாடுகள், பிறப்பு முதல் இறப்பு வரையிலான வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சங்களையும் அமுக்கிவைத்திருக்கும் அளவுக்குப் பரந்துபட்டவையாக உள்ளன. மத சம்பந்தமில்லாமல் இருப்பது எதுவும் இல்லை. தனித்தனி மதச் சட்டங்கள்

அப்படியே வைத்துக் காப்பாற்றப்பட வேண்டுமானால், சமூக விவகாரங்களில் நாம் ஸ்தம்பித்துப் போகும் ஒரு நிலையை அடைவோம் என்று நான் நிச்சயமாக நம்பு கிறேன்.''

## 2

''மதம் சம்பந்தப்பட்ட விஷயங்கள்'' என்பதை விளக்கப்படுத்த வேண்டிய பொறுப்பு நீதிமன்றங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் இதுவரை தந்துள்ள தீர்ப்புகள் மதவாதிகளுக்குச் சாதகமான வைகளே தவிர, முற்போக்குக் கருத்துக்களைக் கொண்டவைகள் அல்ல.

சொரூருபசிங் என்பவருக்கும், பஞ்சாப் மாநிலத் திற்கும் இடையே நடைபெற்ற ஒரு வழக்கில், 1959-ம் ஆண்டில் சுப்ரீம்கோர்ட் அளித்துள்ள தீர்ப்பில்,

Religion in this context is not confined to religious belief but includes the practices which are regarded by the community as part of its religion.

அதாவது,

''மதம்'' என்று (அரசியல் சட்டத்தில்) குறிப்பிடப் பட்டிருப்பது மத நம்பிக்கைகளோடு நின்றுவிடுவதல்ல; மதத்தோடு இணைந்த நடத்தைகள் என்று அம்மதப் பிரிவினர் கருதும் பழக்கங்களும் சேர்ந்த ஒன்றாகும் என்று விளக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு மதப் பிரிவினரும் அமைப்பும் இந்த வகையில் அம்மதம் கூறும் சடங்குகள், நிகழ்ச்சிகள் இவைகளைச் சர்வ சுதந்திரமாய் மிகவும் அத்தியாவசிய மான காரியங்களாகக் கருதி, பிறரது தலையீடு ஏதும்

இன்றிக் கடைப்பிடிக்க முழு உரிமை உண்டு என்றும் மேற்காட்டிய சுப்ரீம்கோர்ட் தீர்ப்பு கூறுகிறது!

ஒரு குறிப்பிட்ட சடங்கு அல்லது நிகழ்ச்சி மதத்திற்கு அல்லது அதன் அமைப்புக்கு மிகவும் இன்றியமையாததா அல்லவா என்பதை முடிவுசெய்யவேண்டிய பொறுப்பு நீதிமன்றங்களுக்கு உண்டு. அதன்படி சில நிகழ்ச்சிகள், நடப்புகள், மதச்சடங்குக் கண்ணோட்டத்தில் தேவையற்றவை என்று சுப்ரீம்கோர்ட் தீர்ப்பு தந்திருந்தபோதிலும்,

அதே தீர்ப்பில் எவை "மதம் சம்பந்தப்பட்ட விஷயங்கள்" (Matters of Religion) ஆகக் கருதப்படும் என்று விளக்குகையில், வழக்கமான வகையிலேயே "பழைய குருடி, கதவைத் திறடி" என்கின்ற பாணியிலேயே குறிப்பிட்டிருக்கிறது!

அத்தீர்ப்பில் சுட்டிக்காட்டப்பட்ட வாசகங்களை அப்படியே கீழே தருகிறோம்.

According to the ceremonial law relating to temples, the persons who are entitled to enter into them for worship, where they are entitled to stand, the hours when the public are to be admitted, how the worship is to be conducted are all matters of religion.

"கோவில்கள் சம்பந்தப்பட்ட சடங்காச்சார சட்டப்படி, வழிபாட்டுக்குரிய வகையில் உள்ளே நுழைந்து பணியாற்றத் தகுதி பெற்றவர்கள் யார் என்பதும், அவர்கள் எந்த இடத்தில் நிற்கவேண்டியவர்கள் என்பதும், பொதுமக்கள் எந்த மணி நேரத்தில் அனுமதிக்கப்படுதல், எந்த வகையில் வழிபாட்டினை நடத்துதல் போன்ற அத்தனையும் மதம் சம்பந்தப்பட்ட விஷயங்களேயாகும்."

கோயில்களில் உள்ள கர்ப்பகிரகத்தில் பார்ப்பனர் தான் பூஜை செய்யவேண்டும் என்பதும், அது ஆகம

விதிப்படி உள்ளது என்பதும், மற்றவர்கள் நெருங்கினால் தொட்டால் சாமி தீட்டாகிவிடும். 'மகா சம்ப்ரோட்சணம்' செய்த (தீட்டுக் கழித்து) பிறகுதான் அச்சிலைக்கு மீண்டும் கடவுள் தன்மை வரும் என்றெல்லாம் பார்ப்பனர்களும் மதவாதிகளும் கூச்சலிடுவதும், அதற்காகப் பழைய சமஸ்கிருத சுலோகங்களைக் காட்டுவதும், ஒரு குறிப்பிட்ட தீட்சை பெற்றவர்கள்தான் கர்ப்பகிரகத்துக்குள் நுழையலாம் என்பதும், சாதியை—பார்ப்பன சாதித் திமிரைப் பாதுகாப்பதற்கல்லாமல் வேறு எதற்காக செய்துகொள்வது?

அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம், ஆதி திராவிடர் உட்பட என்று உத்திரவிட்டுக் கேரளாவில் இருக்கிறதே. அதனால் "சாமி செத்து"ப் போய் விட்டதா?

வைஷ்ணவ கோயிலில் உள்ள யானைக்கு வடகலை நாமம் போடுவதா, தென்கலை நாமம் போடுவதா என்பதுகூட "**மதம் சம்பந்தப்பட்ட விஷயம்**" தானே நம் நாட்டில்? அவைகளையும் கோர்ட்டுகள்தானே நிர்ணயிக்கவேண்டி இருக்கின்றது.

இதுவரையில் ஏற்பட்ட பல சீர்திருத்தங்கள் மதம் சம்பந்தப்பட்டவைகள்தானே! உடன்கட்டை ஏற்றுதல் என்ற கொடுமையாகிய "சதியை" ஒழித்தது, இந்து மதத்திற்கு விரோதம் அல்லவா?

பெண்ணுக்குச் சொத்துரிமை கொடுத்தது மத விரோதம் அல்லவா?

சுருக்கமாகச் சொன்னால், இந்துச் சட்டத்திருத்த மசோதா (**Hindu Code Bill**) என்று பிரதமர் நேருவும், டாக்டர் அம்பேத்காரும் கொண்டுவந்த மசோதா சட்டம் ஆவதற்குள் வைதீக வெறியர்களின் எதிர்ப்பு—காலஞ் சென்ற ஜனாதிபதி பாபு ராஜேந்திர பிரசாத் காட்டிய எதிர்ப்பு உட்பட—எவ்வளவு ஆழமானது?

சமூக நலன் என்பதைக் கருதி, சமதர்மம் பேசும் இந்த யுகத்தில் ராஜாக்களை ஒழித்து, அவர்களுக்குத் தரப்பட்ட மான்யத்தையும் ஒழித்துவிட்டோம்; பணக்காரர்களை ஒழித்துவருகிறோம். ஆனால், சாதி பக்கம் சென்றால் மட்டும் சட்டம் நந்தியாகிறது! சனாதனிகள் எரிமலையாகின்றனர் என்றால், அதைக் கண்டு எவ்வளவு காலத்திற்குச் சகித்துக்கொண்டு இருக்க முடியும் என்பதுதான் நமது கேள்வி.

மக்கள் பிரதிநிதிகளால் செய்யப்படும் சட்டங்களைச் செல்லுபடி அற்றது என்று நீதிபதிகள் கூறும் முறையையே (**Judicial Review**) எடுத்துவிடவேண்டும் என்பதை நாம் இடைவிடாமல் வற்புறுத்தி வருகிறோம்.

அதிலும் குறிப்பாக, சமுதாய சீர்திருத்தம், சாதி ஒழிப்பு, மூடநம்பிக்கை ஒழிப்பு என்று வந்தால், உடனே பார்ப்பனர்கள் கோர்ட்டுகளுக்குப் படையெடுப்பதும், அம்முயற்சிகளுக்குத் தடைவிதிப்பதுமான இச்செயலால் மக்கள் கிளர்ந்து எழக்கூடிய காலகட்டம் வராமல் போய் விடுமா?

மதம் என்பது அவனவனின் தனிப்பட்ட விவகாரம் என்னும்போது, அதற்கும் அரசு பாதுகாப்போ, நீதி மன்றத் துணையோ ஏன் தேவை?

தனி மனிதனுக்கும் இந்த உலகத்தையும் அவனையும் உண்டாக்கியதாக அவனால் கருதப்படும் சிருஷ்டி கர்த்தாவுக்கும் உள்ள உறவுக்குப் பெயர்தான் மதம் என்று வியாக்கியானம் தரப்படுகையில், அதை ஏன் சமூகத்தின் மிகப் பெரும்பாலான மக்களை உழைக்கும் பாட்டாளி வர்க்கத்தை, கீழ்சாதி மக்களாக ஆக்கி வைக்கக் கருவியாகப் பயன்படுத்த வேண்டும்?

அரசியல் சட்டத்தைச் செய்த அறுவரில் நால்வர் பச்சைப் பார்ப்பனர்கள் என்பதை நினைவுபடுத்திக் கொண்டால், இது எவ்வளவு ஜாக்கிரதையாகச்

செய்யப்பட்டிருக்கிறது என்பது எவருக்கும் தெளிவாக விளங்கும்.

சுரண்டல்காரனுக்குச் சுரண்டல் அடிப்படை என்பதுபோல், ஆதிக்கவாதிகட்கும் சாதி இழிவை நிலைநாட்டும் உரிமைக்குப் பெயர்தான் மதச் சுதந்திரம் என்றால், மானத்தை மதிக்கும் மக்கள் அச்சட்டத்தை துச்சமெனக் கருதி, கிளர்ந்து எழுவதைத் தவிர, வேறு வழிதான் என்ன ?

தூசிடைஸ் என்ற அறிஞன் வெகு அழகாகச் சொன்னான், "நீங்கள் எங்களுக்கு எஜமானராக இருக்கலாம். ஆனால், நாங்கள் உங்கள் அடிமைகளாக இருக்க விரும்பவில்லையே என்ன செய்வது ?"

அதையே சற்று மாற்றிச் சொல்லவேண்டிய சட்டம் இன்று நெருங்கிவிட்டது.

நீங்கள் பிராமணராக—மேல் சாதிக்காரராக இருக்க விரும்பலாம். ஆனால், நாங்கள் சூத்திரர்களாக—கீழ் சாதி மக்களாக—உங்கள் வைப்பாட்டி மக்களாக இருக்க விரும்பவில்லையே என்ன செய்வது ? என்று கூறுகிறோம்.

[9-3-'72, 10-3-'72 'விடுதலை' தலையங்கம்]

———

## சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு முழு விவரம்

1970ஆம் வருடத்திய தமிழ்நாடு இந்துமத மற்றும், அறக்கட்டளைகள் (திருத்த) சட்டம் செல்லுபடியாகும் என்று சுப்ரீம்கோர்ட்டின அரசியல் சட்ட பெஞ்சு தீர்ப்பு கூறியுள்ளது. தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள இந்துக் கோயில்களில் வழக்கத்தில் இருந்துவரும் அர்ச்சகர் பதவிக்கான வாரிசில் பரம்பரை உரிமையை ஒழிப்பதே இச்சட்டத் திருத்தம்.

இந்தப் பெஞ்சின் சார்பில் தீர்ப்பை நீதிபதி பாலேகார் படித்தார். தமிழ்நாட்டின் பிரசித்தி பெற்ற வைஷ்ணவ மற்றும், சைவக் கோயில்கள் சம்பந்தப்பட்ட பரம்பரை அர்ச்சகர்களும், சில குறிப்பிட்ட மடாதிபதி களும் தொடர்ந்திருந்த 12 ரிட் மனுக்களையும் அவர் தள்ளுபடி செய்தார்.

### மதப் பழக்கத்தில் தலையிடுகிறதாம்

குறிப்பிட்ட இந்துச் சட்டம் கோயில் வழிபாடு என்ற விஷயத்தில் உள்ள தங்களது அத்தியாவசியமான மதப் பழக்கத்தில் தலையிடுகிறது என்றும், அதன் காரணமாக அரசியல் சட்டத்தின் 25 மற்றும் 26வது பிரிவுகளின்கீழ் வழங்கப்பட்டிருக்கும் தங்களது அடிப்படை உரிமை களை மீறியிருக்கிறது என்றும் காரணம் காட்டி, மனு தாரர்கள் இச்சட்டம் அரசியல் சட்டத்துக்கு முரணானது என்று அறிவிக்கக் கோரியிருந்தார்கள்.

(அரசியல் சட்டத்தின் 25வது பிரிவு, ஒருவர் ஒரு மதத்தைக் கடைப்பிடிப்பது, அம்மதத்தை வழிபடுவது பற்றியது. அரசியல் சட்டத்தின் 26வது பிரிவு, ஒவ்வொரு மதப் பிரிவினரும், அந்த மடங்களின் உட்பிரிவினரும் மத விஷயங்களில் தங்கள் தங்கள் விவகாரங்களைத் தாங்களே நிர்வகித்துக்கொள்ள சுதந்திரம் அளிக்கிறது.)

## ஆகமங்களுக்கு இணங்கவே நடத்தவேண்டும்

பிரதானச் சட்டத்தின் 28வது செக்ஷன், டிரஸ்டிகள், அந்தந்த டிரஸ்டுகளின் விதிமுறைகளின்படியும், அந்தந்த நிறுவனங்கள் தங்களது வழக்கப்படியும் கோயில்களின் விவகாரங்களை நிர்வகிப்பதற்கான அதிகாரங்களைப் பற்றியது. இந்த செக்ஷன் இச்சட்டத்தின் திருத்தப் பட்ட 55வது செக்ஷன்கீழ் டிரஸ்டியினால் செய்யப்படும் அர்ச்சகர் நியமனத்தைக் கட்டுப்படுத்தும் (டிரஷ்டி களினால் கோயில் ஊழியர்கள் நியமிக்கப்படும் அதிகாரம் பற்றியது செக்ஷன் 55.)

ஒரு சைவ, அல்லது வைஷ்ணவ கோயிலில், அர்ச்சகர் நியமனம் அந்தக் கோயிலுக்கு இணக்கமான ஆகமத்தில் கூறப்பட்டிருக்கும் ஆணைகளுக்கு இணங் கவே செய்யப்படவேண்டும்.

## கடவுளின் உருவம் தீட்டாகிவிடும்

அவ்வாறு செய்யத் தவறினால் அது இச்சட்டத்தின் 28வது செக்ஷனுக்கு முரணானது மட்டுமல்லாமல், மதப் பழக்கத்தில் தலையிடுவதாகவும் ஆகும். இதன் தவிர்க்க முடியாத விளைவாக, கடவுளின் உருவம் தீட்டாக்கப் பட்டுவிடும்.

திருத்தப்பட்ட இந்தச் சட்டம் செல்லுபடியாகுமா என்பதைப் பரிசீலிக்கும்போது, எதைக் கவனத்தில் கொள்ளவேண்டும்? ஒரு டிரஸ்டி, ஆகமங்களுக்கு இணங்க, ஒரு மதப் பிரிவில் அல்லது உட்பிரிவில் அல்லது குழுவில் இருந்து ஓர் அர்ச்சகரை நியமிக்கும் போது, அந்தக் கோயிலுக்கே உரித்தான சிறப்பான வழக்கப்படி பரம்பரை முறையைக் கட்டாயமாகக் கடைப்பிடிக்க வேண்டுமா—இல்லையா என்பதுதான்.

## பழங்காலம் முதல் பரம்பரை பாத்தியதை

ஒரு குறிப்பிட்ட கோயிலில் அர்ச்சகரை நியமிப்பதில் பரம்பரை முறை வழக்கத்தில் இல்லை என்று எதிர்

வழக்காடுவது மிகவும் காலங் கடந்ததாக ஆகிவிட்டது. பரம்பரை முறை கையாளப்பட்டது, எந்தக் காரணத்துக் காகவானாலும்—வசதியாக இருந்தது என்ற காரணமோ அல்லது வேறு காரணமோ—பழங்காலம் முதல் கொண்டே பரம்பரை பாத்தியதை என்ற இந்த உரிமை ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. பிரதான சட்டத்தின் திருத்தப்படாத 55வது செக்ஷனில் இது முழுமையாக அங்கீகரிக்கவும் பட்டிருக்கிறது.

(இந்த செக்ஷன் 55, டிரஸ்டிகளால் கோயில் ஊழியர்கள், மற்றும் அர்ச்சகர்கள் நியமனம் பற்றியது.)

தற்போதைய ரிட் மனுக்களின் உண்மையான பிரச்னை என்ன? பரம்பரை வாரிசுரிமையுடன் அர்ச்ச கர்களை நியமிக்கும் இத்தகைய வழக்கம் மதச்சார்பற்ற ஒரு வழக்கமா அல்லது மத சம்பந்தபபட்ட ஒரு வழக்கமா என்பதுதான் பிரச்னை.

## சமூக நலம் அல்லது சீர்திருத்தம்

இது மதச்சார்பற்ற ஒரு வழக்கமானால், இதுபற்றிச் சட்டமியற்றுவது அரசியல் சட்டத்தின் பிரிவு 25 (1) (ஏ) யின் கீழ் செல்லுபடியானதே என்பது வெளிப்படை. அதாவது, மதப் பழக்கத்தோடு தொடர்புள்ளதான, ஏதேனும் பொருளாதார நிதி விவகார அரசியல் மற்றும் மதச்சார்பற்ற நடவடிக்கையை ஒழுங்குபடுத்துவது அல்லது கட்டுப்படுத்துவதாகும்.

இது மதச் சம்பந்தமான ஒரு வழக்கமானால், குறிப் பிட்ட இச்சட்டம் அரசியல் சட்டத்தின் 25 (2)(பி)பிரிவின் கீழ் முழுமையாக அமைந்திருக்கும் பட்சத்தில் இது அனுமதிக்கத் தக்கதே அதாவது, சமூக நலனுக்காக அல்லது சீர்திருத்தத்துக்காக அரசாங்கம் சட்டமியற்று வதற்கு அதிகாரம் வழங்குவது.

ஒரு மத குரு அல்லது ஒரு அர்ச்சகர் நியமனம் செய்யப்பட்டதும் மதச் சம்பந்தமான பணிகளைப் புரிய

வேண்டியது வரும் என்பது உண்மையே. ஆனால், இங்கே கேள்வி என்னவென்றால், ஒரு மத குருவை நியமனம் செய்வதே மதச்சார்பற்ற பணியா அல்லது மதப் பழக்கமா என்பதுதான்.

## அர்ச்சகர் ஆன்மீகத் தலைவரல்ல

ஒரு அர்ச்சகர் தேர்ச்சி மிக்க ஒரு நபராக, ஒரு கோயிலில் செய்யப்படவேண்டிய தேவையான சடங்காச் சாரங்களிலும், ஆகமங்களிலும் நன்கு திறமைகொண்டவ ராக இருக்கலாம். ஆனால், ஒரு ஆன்மீகத் தலைவரின் (மடாதிபதி போல) அந்தஸ்தை அவர் பெற்றிருப்ப தில்லை.

அர்ச்சகரைத் தர்மகர்த்தாவே நியமனம் செய்வார்; அர்ச்சகர் கோயிலின் ஒரு ஊழியர். இச்சட்டத்தின் திருத்தப்படாத 56வது செக்ஷனின் கீழ்கூட டிரஸ்டி களின் ஒழுங்கு நடவடிக்கை அதிகாரத்துக்கு அவர் உட்பட்டவரே.

அர்ச்சகர் என்ற பதவியில் இருக்கும் நிலையில் டிரஸ்டிகளால் அவர் நியமிக்கப்படும் நடவடிக்கை அத்தியாவசியமாக மதச்சார்பற்றதே. அவரது நியமனம் ஒரு மதச்சார்பற்ற அதிகாரத்துக்கே கட்டுப்பட்டது. ஒரு கோயிலின் லௌகீகமான நிறுவனர் எவரும்கூட ஒரு அர்ச்சகரை நியமிக்கலாம்.

## பரம்பரை அர்ச்சகர் பதவிகோர முடியாது

அர்ச்சகராக யாரை நியமிப்பது என்று தேர்ந் தெடுப்பதிலும், நியமிப்பதிலும் கோயில் நிர்வாகிகள் பிரயோகிப்பது அத்தியாவசியமாக ஒரு மதச்சார்பற்ற பணியையே.

இந்தக் காரணத்திற்காக, ஒரு அர்ச்சகரின் மகனோ, மகனின் மகனோ தலைமுறை தலைமுறை

யாக அர்ச்சகர் பதவியில் தொடர்ந்து இருந்துவந்திருக்கின்றார்கள் என்ற உண்மை நிலை அர்ச்சகர் நியமனம் பற்றிய கொள்கையில் எந்த மாற்றத்தையும் செய்ய வில்லை. அத்தகைய பரம்பரை அர்ச்சகர் எவரும் அப் பதவிக்கு எந்தவிதமான உரிமையும் கோரமுடியாது.

## வலையை அகலமாக வீசமுடியவில்லை

சில கோயில்களில் அர்ச்சகர் நியமனம் செய்வதில் பரம்பரைக் கொள்கை பின்பற்றப்பட்டு வந்திருக்கிறது என்ற உண்மை நிலை தொடராகச் செய்யப்பட்ட அந்த நியமனம் மதச்சார்பற்றதாக அன்றி வேறெப் படியும் ஆக்காது. நியமனம் சம்பந்தப்பட்ட ஆதாரமான இடம் டிரஸ்டிக்குக் குறுகலாக இருந்திருக்கிறது என்றே பொருள்படும். ஒரு குறிப்பிட்ட கோயிலில் ஒரு அர்ச்சகர் பதவிக்குப் பொருத்தமான அபேட்சகரைப் பொறுக்கி எடுப்பதில் டிரஸ்டி தமது வலையை அகலப்பட வீச முடியவில்லை: அதற்குப் பதிலாக சம்பந்தப்பட்ட அந்த டிரஸ்டி அர்ச்சகர் பதவியைக் கடைசியாக வகித்தவரின் அடுத்த வாரிசுதாரரையே நியமித்திருப்பார்.

இவ்வாறு நியமனம் செய்யப்பட்ட பின்னர் அந்த அர்ச்சகர் வழிபாடு நடத்தினார் என்பது அந்த நியமனம் மதப்பழக்கம் என்றோ, மதம் சம்பந்தப்பட்ட ஒரு விஷயம் என்றோ கொள்ள அதற்கு எந்த ஆதாரமும் கிடையாது.

## மத விவகாரத்தில் தலையிடவில்லை

சம்பந்தப்பட்ட திருத்தச் சட்டத்தின்கீழ், ஒரு அபேட்சகர் குறிப்பிட்ட இந்த விவகாரத்தில், அர்ச்சகர் பதவியில் கடைசியாக இருந்தவரின் வாரிசின்படி அடுத்தபடியாக இருந்தவர் என்ற ஒரே காரணத்துக்காக அவரை அர்ச்சகராக டிரஸ்டி நியமிக்கவேண்டியது இல்லை. அந்த அளவுவரை அந்த அளவுவரையேதான்

பரம்பரை நியமன முறை பழக்கத்தில் உள்ள ஒரு கோயிலின் வழக்கத்தில் இந்தப் பகுதிக்கு இணங்கும் வகையில், ஒரு டிரஸடி நிர்வாகம் நடத்தவேண்டும் என்று பிரதான சட்டத்தின் 28வது செக்ஷன் அந்த டிரஸ்டிமீது சுமத்தியுள்ள கட்டாயத்தில் இருந்து அவர் விடுதலை பெறுகிறார்.

எனவே, இந்தக் குறிப்பிட்ட சட்டம் எந்த மதப் பழக்கத்திலும், எந்த மத விவகாரத்திலும் தலையிட வில்லை. எனவே, இது செல்லாதது அல்ல; செல்லக் கூடியதே.

## சாதி, இனம், குலம் இல்லாத அர்ச்சகர் பூஜை

சாதி, இனம், குலம் ஏதுமற்ற ஒரு அர்ச்சக வகுப்பை உருவாக்கவேண்டும் என்பதே தமிழ்நாடு அரசு ஏற்றுக்கொண்டிருக்கும் லட்சியம் என்று மனுதாரர்கள் கூறினார்கள். இச்சட்டத்தின்கீழ் மாநில அரசு அர்ச்சகர் நியமனத்துக்கு என்று விதித்துள்ள தகுதிகளை விதிக்க அதிகாரம் உள்ளது. இதன்படி ஆகமங்களுக்கு முரணான தகுதிகளை விதிப்பதற்குக்கூட மாநில அரசு விரும்பினால் அவ்வாறே செய்யலாம் என்று வாதிட் டார்கள்.

இது சம்பந்தமாக சென்னை இந்துமத நிறுவனங்கள் (அலுவலர் மற்றும் ஊழியர்கள்) விதிகள், 1964—விதி 12அய்ச் சுட்டிக்காட்டலாம். பிரதானச் சட்டத்தின்கீழ் அர்ச்சகர்களுக்குத் தகுதி விதிக்கும் ஆகமங்களுக்கு இணங்கவே இந்த விதி உள்ளது.

## சடங்காச்சாரம் உதாசீனம்

கோயில்களில் சடங்குகளையும், ஆச்சாரங்களை யும் நடத்துவதற்கான ஒரு அர்ச்சகரின் தகுதி விஷயத் தில் இன்னின்ன யோக்கியதாம்சங்கள் இருக்கவேண்டும் என்று விதிப்பதில் மாநில அரசுக்கு வழிகாட்டுதலுக்கு

ஏதும் இல்லாத பெரும் அதிகாரம் வழங்கப்பட்டிருப்ப தாக மனுதாரர்கள் வாதிக்கிறார்கள். இந்த நிலை காரணமாக மாநில அரசு தனது மனத்தை மாற்றிக் கொள்ளலாம். பாரம்பரியமான பூஜைகளையும், சடங் காச்சாரங்களையும் உதாசீனம் செய்துவிட்டுப் பல கோயில்களில் பூஜைக்கு என்று எளிமையான...தரப் படுத்தப்பட்ட திட்டம் ஒன்றை விதிக்கலாம் என்று மனுதாரர்கள் கூறினார்கள்.

இது ஏற்கத்தக்க வாதம் அல்ல; இது ஆதார மற்றது. உரிய காலத்துக்கு முந்திய அகாலமானது நமது (சுப்ரீம்கோர்ட்) அபிப்பிராயப்படி மனுதாரர்களின் இந்தப் பயம் அடிப்படை அற்றது.

## புரட்சிகரமாக மாற்ற எண்ணமா?

மேலே குறிப்பிட்ட 12வது விதி இன்னமும்—இங்கும் பொருந்தக்கூடியதே. பல்வேறு கோயில்களில் இப்போது நடைமுறையில் இருக்கும் கோயில்—வழிபாட்டை புரட்சிகரமாக மாற்ற தமிழ்நாடு அரசு விரும்புகிறது என்று எண்ணுவதற்கு எந்தவிதமான வலுவான காரணமும் கிடையாது. இச்சட்டம் மதச்சார்பற்ற தாகவே அத்தியாவசியமாக உள்ளது. இச்சட்டத்தின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகவே மாநில அரசுக்கு விதிமுறைகளை உருவாக்கும் அதிகாரம் வழங்கப்பட் டிருக்கிறது.

கோயில்களில் பின்பற்றப்பட்டுவரும் சடங்கு களிலும், ஆச்சாரங்களிலும் ஒரு மாற்றத்தை விளை விக்கவேண்டும் என்பது இச்சட்டத்தின் நோக்கங்களில் ஒன்று என்று இச்சட்டத்தின் எந்த இடத்திலும் குறியீடு எதுவும் எங்குமே காட்டப்படவில்லை. இதற்கு மாறாக, அரசியல் சட்டமே 26வது பிரிவினால் எந்தவொரு மதப் பிரிவுக்கும், மத உட்பிரிவுக்கும் வழங்கப்பட்டிருக்கும் உரிமைகளுக்கு விரோதமாக எந்தவொரு கடமையையும் சுமத்தவோ, எந்தவொரு அதிகாரத்தையும் வழங்கவோ

இந்தச் சட்டத்தில் அடங்கியுள்ள எந்த அம்சமும் கருதவில்லை என்று பிரதான சட்டத்தின் 107வது செக்ஷன் வலியுறுத்துகிறது. இதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

## கவுரவமும் ஊதியமும் பாதிக்கப்படவில்லை

சட்டத்தின் 105வது செக்ஷனையும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். எந்த ஒரு மத நிறுவனத்திலும் அல்லது பிற விஷயங்கள் சம்பந்தப்பட்ட அதன் நிலைநாட்டப்பட்ட வழக்கத்திலும் மரபுப்படியோ அல்லது பிற வகையிலோ உரிமை பெற்ற எந்த ஒரு நபரின் கவுரத்தையோ அல்லது ஊதியத்தையோ கூடுதலான வருவாயிலோ பாதிக்கும்படியாக இச்சட்டத்தில் எதுவும் அடங்கியிருக்கவில்லை. இச்சட்டம் அல்லது விதிகளில் செய்யப்பட்ட சில குறிப்பிட்ட விதிவிலக்குகள் தவிர என்று 105வது செக்ஷன் கூறுகிறது.

இந்தச் சந்தர்ப்பத்தில், மேலும் ஒன்று குறிப்பிடத் தக்கது, கோயில்களின் சடங்குகளிலும், ஆச்சாரங்களிலும் தலையிடும் எண்ணத்துடன் அரசாங்கத்தினால் ஏதாவது விதி வகுக்கப்படுமானால், அந்த விதியை எதிர்த்துக் கோயில் வழிபாட்டில் அக்கறையுள்ளவர்களால் கோர்ட்டில் வழக்காட முடியும்.

## ஆகமங்கள் தோன்றியது எப்படி? கோயில் கட்ட!

பிரதான சட்டம் (குறிப்பிட்ட இந்தத் திருத்தச் சட்டத்தினால் திருத்தப்படாத நிலையில்) கோயில்களின் மத சம்பந்தப்பட்ட வழக்கங்களிலும் தலையிடவில்லை என்று மனுதாரர்கள் ஒப்புக்கொண்டதைக் குறிப்பிட விரும்புகிறோம்.

கி.மு. 4 அல்லது 5வது நூற்றாண்டு முதற்கொண்டு நடைமுறையில் இருந்துவந்துள்ள கோயில் வழிபாடு பற்றிய இந்துமத நம்பிக்கைகளின், பழக்கங்களின்

கோட்பாடுகளை நாம் பரிசீலிக்கவேண்டும். அர்ச்சகர் என்ற முறையும்கூட நிலைபெறத் தொடங்கியது. கோயில்கள் நிறுவப்பட்டு, அர்ச்சகர் முறையும் நிறுவப் பட்டதும், சடங்காச்சாரங்கள் பற்றிய நூல்களும் தொகுக்கப்பட்டன. அவைகளே ஆகமங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

## சிலை நிறுவ விதியுண்டு

சுப்ரீம்கோர்ட் மற்றும் பிரிவு கவுன்சில் உட்பட கோர்ட்டுகளின் முந்தைய முடிவுகள் சிலவற்றின் மூலம் ஆகமங்களின் அதிகார நிலை அங்கீகரிக்கப்பட்டது. இந்த ஆகமங்கள் (வைஷ்ணவ ஆகமமானாலும் சரி, சைவ ஆகமமானாலும் சரி) சடங்காச்சாரம் சம்பந்தப் பட்ட சட்டங்களை உள்ளடக்கியுள்ளன. கோயில் களைக் கட்டுவது, அவற்றின் உள்ளே சிலைகளை நிறுவுவது,என்னென்ன முறைகளில் வழிபாடு நடத்துவது அர்ச்சகர் என்ற முறையில் வழிபாடு நடத்தத் தகுதி பெற்றவர்கள், எந்தெந்த வகைப்பட்டவர்கள், எந்தெந்த குழுவினைச் சேர்ந்தவர்கள் என்பன போன்ற விஷயங் களை இவை உள்ளடக்கியுள்ளன.

லௌகீகப் பாமர பக்தர்கள் கோயிலில் கூடும்போது அவர்களுக்கு ஆன்மீக நலன் ஏற்படச் செய்வது, கடவுள் தீட்டுப்பட்டுவிடாமலும் காப்பாற்றுவது—ஆகிய இரண்டு நோக்கங்கள் சடங்காச்சாரங்களுக்கு உண்டு. (வழிபாடு, சடங்காச்சாரம் இன்ன பிற விஷயங்களில் ஆகமங்கள் விதித்துள்ள விதிமுறைகளைக் கடுமை யாகக் கடைப்பிடிப்பதன் மூலம் இது நடக்கிறது.)

## கடவுள் உருவம் தீட்டாகிவிடும்

ஆகமத்தின் உள்ளடங்கிய, வழிபாடு சம்பந்தப்பட்ட விதிமுறைகளில் ஏதேனும் ஒன்று மீறப்படுமானால், அவற்றில் ஏதேனும் மாற்றம் செய்யப்படுமானால், கடவுளின் உருவம் அசுத்தப்பட்டதாகிவிடும். உண்மை

யில் சம்பந்தப்பட்ட கோயிலின் புனிதத்தன்மை மீண்டும் பெறப்படுவதற்காக சுத்திகரிப்பு (சம்ப்ரோட்சண) சடங்காச்சாரங்கள் நடத்தப்படவேண்டும்.

வழிபாடு நடத்துவோர் சடங்காச்சாரங்களுக்கும் பெரும் மதிப்பு வைத்திருக்கிறார்கள். அந்த மதம்மீது நம்பிக்கை இல்லாதவர்களான பிற மனிதர்கள் என்ன தான் இந்தச் சடங்குகளைப்பற்றியும், ஆச்சாரங்களைப் பற்றியும் கருதினாலும் அவை இந்துமத நம்பிக்கையின் ஒரு பகுதியே. அவை பகுத்தறிவற்றவை அல்லது மூட நம்பிக்கையானவை என்று நீக்கிவிட முடியாது.

**சைவக் கோயிலில் வைஷ்ணவ அர்ச்சகனா !**

அர்ச்சகர்களுக்குப் பொருந்தும் விதிமுறைகளும் ஆகமங்களில் உள்ளன. உதாரணமாக, ஒரு சைவக் கோயிலில், ஒரு சிவ பக்தன் மட்டுமே—அதிலும் குறிப்பிட்ட ஒரு பிரிவை அல்லது குழுவை அல்லது உட் குழுவைச் சேர்ந்த சிவ பக்தன் மட்டுமே அர்ச்சகனாகத் தகுதி படைத்தவனாவான். ஒரு வைஷ்ணவக் கோயிலில் ஒரு சைவன், அவன் எந்தவொரு சாதியைச் சேர்ந்தவனாக இருந்தாலும்கூட, அவன் கல்வியில் எவ்வளவு சிறந்தவனாக இருந்தாலும்கூட அர்ச்சகனாகமுடியாது. இதேபோல, ஒரு வைஷ்ணவன், ஒரு சைவக்கோயிலில் அர்ச்சகனாக முடியாது.

என்றாலும், ஒரு வைஷ்ணவன், ஒரு சைவக் கோயிலில் லௌகீக பாமர வழிபடுவோனாக வழிபாடு நடத்த எந்தவிதமான தடையும் கிடையாது. இதே போல ஒரு சைவன், ஒரு வைஷ்ணவக் கோயிலில் வழிபாடு நடத்த எந்தவிதமான தடையும் இல்லை.

**மத நம்பிக்கையின் சாரம் என்ன ?**

ஆகமங்கள் விளக்குவது எதையென்றால், அவன் (குறிப்பிட்ட ஒரு பிரிவைச் சேர்ந்த ஒரு நபர்) மற்றொரு

பிரிவைச் சேர்ந்த கோயிலில் அர்ச்சகனாக நியமிக்கப் படுவதைத்தான்.

இது விஷயத்தில் இங்கே ஆகமங்களில் நிபுணரான ஒருவர் இங்கே தாக்கல் செய்த பிராமண வாக்குமூலம் குறிப்பிடத்தக்கது. குறிப்பிட்ட ஒரு வகுப்புப் பிரிவைச் சேர்ந்த கோயிலின் அர்ச்சகர் குறிப்பிட்ட அந்தக் கடவுளை வழிபாடு நடத்தத் தகுதியான சடங்காச்சாரங் களில் தேர்ச்சி பெற்றவராக இருக்கவேண்டும் என்ப தோடு, ஒரு குறிப்பிட்ட பிரிவைச் சேர்ந்தவராகவும் இருக்கவேண்டும் என்று ஆகமங்கள் விதிக்கின்றன.

மாறுபட்ட பிரிவைச் சேர்ந்த ஒரு அர்ச்சகர், கடவுள் உருவத்தைத் தொடுவதால் அது அசுசிப்படுத்தப் படுவதாகக் கருதப்படுகிறது. எந்தச் சந்தர்ப்ப சூழ் நிலையிலும் கடவுள் உருவம் அசுசிப்படுத்தப்படுவதோ, தீட்டாக்கப்படுவதோ கூடாது என்றுதான் எல்லா வகையான வழிபடுவோரின் மத நம்பிக்கையின் சாரம் என்பதால், கோயில் வழிபாடு என்ற விஷயத்தில் அர்ச்சகர் ஒரு முக்கியமான இடத்தை வகிக்கிறார் என்பதில் சந்தேகமில்லை.

## தீட்டானால் அது அரசு தலையீடு

ஆகமங்களால் அங்கீகரிக்கப்படாத ஒரு அர்ச்சகர் தொடுவதன் மூலம் கடவுளின் உருவம் அசுசிப்படுத்தப் படுவதையோ, தீட்டாக்கப்படுவதையோ எந்த ஒரு அரசாங்க நடவடிக்கை அனுமதித்தாலும் அது மிகவும் முக்கியமான வகையில் இந்துமத வழிபடுவோரின் மத நம்பிக்கையிலும், பழக்கத்திலும் கடுமையாகத் தலை யிடுவதாகும். அதன் காரணமாக அது அரசியல் சட்டத்தின் 25 (1)வது பிரிவின்கீழ் செல்லுபடியாகாது என்பது முதல் நோக்கிலே தெரிவதாகும்.

இனி, அரசியல் சட்டத்தின் 25, 26வது பிரிவுகளின் நோக்கம் என்ன என்று பார்க்கலாம். (மத விஷயங்களை

நிர்வகிக்கும் சுதந்திரமும், சுதந்திரமான மத வழிபாடுப் பற்றிய அடிப்படை உரிமை பற்றியவை இவை) கோட்பாடுகள் அல்லது நம்பிக்கைகள் பற்றிய விஷயங் களுக்கு மட்டுமான ஓர் அளவுக்குட்பட்டவையே. இந்தப் பிரிவுகளின்படி கிடைக்கும் பாதுகாப்புகள் என்பது இல்லை. மதத்தைக் கடைப்பிடிப்பதில் செய்யப்படும் நடவடிக்கைகளுக்குக்கூட இவை விரிவாகப் பொருந்தும். எனவே, மதத்தின் ஒருங்கிணைந்த பகுதியான வழிபாட்டு முறைகள், சடங்குகள், அனுஷ்டானங்கள், ஆச்சாரங்கள் ஆகியவற்றுக்கும் இவை ஒரு உத்தரவாதம் அளிக் கின்றன.

## வழிபாட்டின் நோக்கமே தோற்கும்

ஒரு மதத்தின் அல்லது ஒரு மதப் பழக்கத்தின் அத்தியாவசியம், பகுதியாக அமைந்திருப்பது எது என்பதை அந்தக் குறிப்பிட்ட மதத்தின் கோட்பாட்டுக்கு இணங்கக் கோர்ட்டுதான் நிர்ணயிக்கவேண்டும். மதத் தின் ஒரு பகுதி என்று சமூகத்தினால் மதிக்கப்படும் பழக்கங்களும் அதில் அடங்கும்.

ஒரு குறிப்பிட்ட பிரிவைச் சேர்ந்த ஒரு நபரினா லன்றி, பிற யாராலாவது ஒரு கோயிலின் சடங்காச் சாரங்கள் நடத்தப்பட்டனவென்றால், அந்த வழிபாட்டின் நோக்கமே தோற்றுப் போகும் என்பது நெடுங்காலமாக அங்கீகரிக்கப்பட்ட ஒன்று.

## எல்லோருக்கும் திறந்துவிடப்படுமா?

கோயில்களில் பதவி வகிப்போரின் நியமன விஷயத் தில் பரம்பரைக் கொள்கை ரத்துசெய்யப்படும் என்றும், அர்ச்சகர் பதவி சாதி, குலம், இனம் போன்றவற்றைக் கருத்தில் கொள்ளாமல், எல்லா அபேட்சகர்களுக்கும் திறந்துவிடப்படும் என்றும், குறிப்பிட்ட இந்தச் சட்டத் தின் நோக்கங்களும், காரணங்களும் விவரிக்கின்றன என்றும் மனுதாரர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இந்த விஷயத்தில் குறிப்பிட்ட இச்சட்டம் மாநில அரசுக்கு அர்ச்சகர்களுக்குத் தேவைப்படும் தகுதிகளை நிர்ணயிப்பது அல்லது நிர்ணயிக்காமல் இருப்பது என்ற விஷயங்களில் கட்டுப்பாடற்ற அதிகாரங்களை வழங்குவதாகவும் இதன் விளைவாக, ஆகமங்களினால் அங்கீகரிக்கப்படாத பிரிவினரிடையே இருந்து குறிப்பிட்ட கோயில்களுக்கு அர்ச்சகர்கள் நியமனம் செய்யும்படியாக வற்புறுத்தப்படுவார்கள் என்றும் மனுதாரர்கள் வாதிட்டனர்.

இத்தகைய மாறுபாடு கடவுள் உருவத்தை அசுசிப் படுத்தும் நிலைக்கு வழிவகுக்கும் என்பதால் குறிப்பிட்ட இந்தத் திருத்தச் சட்டத்தின் மூலம் அரசாங்கத்தினால் எடுத்துக்கொள்ளப்படும் அதிகாரம் மதச் சுதந்திரங்களில் தலையிடுவதற்கு வழிவகுக்கும் என்றும் மனுதாரர்கள் வாதாடினார்கள்.

## தடம் திருப்பிவிட்டாராம்

மேற்கண்ட அபிப்பிராயத்தின் வேகம் தமிழ்நாடு அரசுக்காக ஆஜராகி வாதாடிய தமிழ்நாடு அடவோகேட் ஜெனரலின்மீது தாக்காமல் இல்லை. அரசின் இந்த வக்கீல் இதற்கு என்ன கூறினார்? செக்ஷன் 55ல் செய்யப்பட்ட மாறுதல்களை மட்டுமே தனிமைப்படுத்தி கோர்ட்டு பரிசீலனை செய்தால், மனுதாரர்களினால் விவரிக்கப்படும் அந்த ஒரு நிலைமை எழாது என்று அரசு வக்கீல் கருத்துக் கூறினார். இது பிரச்னையைத் தடம் திருப்பிவிடுவதாகும்.

சட்டத்தின் நோக்கமும், காரணங்களும் பற்றிய வாக்குமூலத்தின் மூலமோ அல்லது அரசின் எதிர் பிரமாண வாக்குமூலத்தில் மீண்டும் அதையே வலியுறுத்தியதன் மூலமோ, தாம் கட்டுப்பட்டவர் என்பதை அரசு வக்கீல் ஒப்புக்கொள்ளவே இல்லை என்பதையும் இங்கே சுட்டிக்காட்ட வேண்டும்.

திருத்தப்பட்ட 55வது செக்ஷன்படி டிரஸ்டிகளுக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரம் வரை முறையற்றது

அல்ல. சட்டத்தின் 28வது செக்ஷனுடன் சேர்த்து இந்த அதிகாரம் பார்க்கப்படவேண்டும் என்றும் அரசு வாதம் புரிந்தது. (டிரஸ்டின் விதிகளுக்கும் வழக்கத்துக்கும் இணங்க கோயில்களின் விவகாரங்களை நிர்வகிக்க டிரஸ்டிகளுக்கு உள்ள அதிகாரம்பற்றியது இந்த செகஷன்.)

## வழக்கத்திலிருந்து விடுதலையா ?

ஒரு கோயிலின் அர்ச்சகர் அல்லது பூசாரி குறிப்பிட்ட ஒரு பிரிவினைச் சேர்ந்தவராக இருக்கவேண்டும் என்பது ஒரு நிறுவனத்தின் வழக்கம் என்றால், (அர்ச்சகரை நியமிக்கும்போது) டிரஸ்டிக்கும் அந்த வழக்கம் நிபந்தனையாகப் பொருந்தும் குறிப்பிட்ட ஒரு பிரிவில் இருந்து ஒருவரை நியமிக்கும் வழக்கத்துக்கு இணங்கத் திருத்தப்பட்ட செக்ஷன் 55ன் கீழ்தான் டிரஸ்டி நியமனம் செய்தாக வேண்டும். இத்தகைய வழக்கத்துக்கு இணங்கவே நியமனம் செய்யவேண்டிய கடமையில இருந்து டிரஸ்டியை விடுவித்துக்கொள்ள 55வது செக்ஷனில் எதுவும் கிடையாது. வாரிசில் அடுத்தபடியாக இருப்பவரை நியமிக்கவேண்டும் என்று டிரஸ்டி ஒருவருக்கு நிபந்தனையைத்திருத்தப்பட்ட 55வது செக்ஷன விதிக்கவில்லை. இந்தக் கொள்கையானது நடைமுறையிலுள்ள வழக்கத்தின் ஒரு பகுதி அல்ல. குறிப்பிட்ட ஒரு விவகாரத்தில், குறிபபிட்ட ஒரு பிரிவில் இருந்தே நியமிக்கவேண்டும் என்பதுதான் உண்மையான வழக்கம் என்று அரசு விவாதித்தது.

## நிர்ப்பந்தப்படுத்தவில்லை

குறிப்பிட்ட இந்தத் திருத்தச் சட்டம் தகுதிவாய்ந்த ஒரு வாரிசு கிடைக்கின்ற பட்சத்தில் ஒவ்வொரு விவகாரத்திலும் இதை விலக்கிவிட வேண்டும் என்று டிரஸ்டியை நிர்ப்பநதப்படுத்தவில்லை. குறிப்பிட்ட இந்தச் சட்டத்தின்கீழ் டிரஸ்டிக்குச் சட்டபூர்வமான கடமை ஏதும் இல்லையென்றாலும்கூட. வாரிசுப்படி

அடுத்ததாக இருப்பவர் தகுதி படைத்தவராக இருந்தால் அவரையே நியமிக்காமல் இருப்பதற்கு எந்த முகாந்திரமும் இல்லை—இவ்வாறு மாநில அரசு சார்பில் வாதம் புரியப்பட்டது.

## சி. பி. ராமசாமி அய்யர் கமிட்டி

ஏதாவது குறிப்பிட்ட ஒரு கோயிலில் பரம்பரைக் கொள்கை அமுலில் இருப்பது வழக்கம் என்றால், அது மதச்சார்பற்ற வழக்கமாகவே இருக்கவேண்டும். இது பற்றிச் சட்டமியற்றுவது அனுமதிக்கப்படத் தக்கதே. அது மதச் சம்பந்தப்பட்ட பழக்கமாக இருந்தாலும்கூட சமூக சீர்திருத்தம் என்ற முறையில் சட்டமியற்றுவது அனுமதிக்கப்படத்தக்கதே. இது விஷயமாக டாக்டர் சி. பி. ராமசாமி அய்யர் கமிட்டி என்று அழைக்கப்படும் இந்துமத அறக்கட்டளைகள் கமிட்டியின் அறிக்கையில் காணப்படும் பொருத்தமான சில பகுதிகளை—அர்ச்சகர் என்ற பதவிமுறையில் நிலவும் சில முறைகேடுகளை மாநில அரசு எடுத்துக்காட்டி வாதம் புரிந்தது.

———

# சமூக இழிவு ஒழிப்பு மாநாட்டுத் தீர்மானங்கள்

★

[28-5-'72 அன்று சென்னையில் நடைபெற்ற திராவிடர் கழக மாநில மாநாடான சமூக இழிவு ஒழிப்பு மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:)

## அரசியல் சட்டத்தை மாற்றுக

1. இந்திய அரசியல் சட்டம் என்பது சமுதாயத் தன்மையைப் பொருத்தவரை மனுதர்மம் என்னும் பார்ப்பன உயர்வாழ்வுக்குப் பாதுகாப்புக் கொடுக்கும் சட்டமாகவே பார்ப்பனராலேயே உண்டாக்கப்பட்ட சட்டமாகையால், அதை மாற்றி அமைக்கவேண்டியது மிகமிக அவசியமானது என்று இம்மாநாடு தீர்மானிக்கிறது.

## தமிழ்நாட்டுக்கு முழுச்சுதந்திரம்

2. உண்மையான தமிழ்மக்கள் சுதந்திரத்தோடும், மானத்தோடும் வாழவேண்டுமானால், இன்றைய இந்திய யூனியன் என்னும் ஆட்சியின் கீழ் உள்ள அடிமைத்தன்மை மாறியே ஆக வேண்டும் என்று இம்மாநாடு கருதுவதால், நமது எதிர்காலப்பணி, நமது நாட்டை முழுச் சுதந்திரம் உடைய நாடாக ஆக்கவேண்டியது தான் நமது முதல் கடமை என்று இம்மாநாடு தீர்மானிக்கிறது.

## கோயில் பகிஷ்காரப் பிரச்சாரம்

3. நாம் அருகில் சென்று, நாமாய் பூசை செய்து வணங்குவதற்கு உரிமை இல்லாத இடமும், கடவுளு (சிலையு)ம் நம்மைச் சமுதாயப் பிறவி இழிவு செய்வதற்கென்றே உண்டாக்கப்பட்டிருப்பதால், கடவுள், மதத்தன்மை எப்படி இருந்தாலும், நமது சமுதாய பிறவி இழிவு ஒழிக்கப்படவேண்டும் என்பதை முன்னிட்டு, அப்படிப்பட்ட கோயில் (இடங்)களையும், சிலை உருவ கடவுள்களையும் பகிஷ்கரித்து ஆகவேண்டும் என்பதோடு, பகிஷ்கரிப்புப் பிரச்சாரத்தையும் செய்தாகவேண்டும் என்று இம்மாநாடு தீர்மானிக்கிறது. இதற்காகத் தடுப்புப் பிரச்சாரம் என்பதாக, முக்கியமான கோயில்களுக்குச் சென்று, அங்கு வழிபட வரும் மக்களிடம் கடவுள் தன்மையையும், நாம் இழிவுப்படுத்தப்படும் தன்மையையும் சமாதான முறையில் விண்ணப்பித்துக் கூறி, மக்களை இழிவுக்கும், அறியாமைக்கும் ஆளாகாமல் இருக்க முயற்சிக்கவேண்டும் என்று இம்மாநாடு தீர்மானிக்கிறது.

இப்பகிஷ்காரக் கிளர்ச்சியினை உடனடியாகத் துவக்க, தலைவர் தந்தை பெரியார் அவர்களுக்கு இம்மாநாடு முழு உரிமை கொடுக்கிறது.

## தீவிர மத எதிர்ப்புப் பிரச்சாரம்

4. இன்று நமக்குப் புகுத்தப்பட்ட கடவுள்களும், அவற்றின் கதைகளும், உற்சவம், பூஜை முதலியவைகளும், மதங்களும் காட்டுமிறாண்டி காலத்தில் அதாவது, சுமார் 1000, 2000, 2500 ஆண்டுகளுக்குமுன் கற்பனை செய்யப் பட்டவைகளாதலாலும், இன்றைய பகுத்தறிவு

வளர்ச்சி காலத்துக்கு அது சிறிதும் பொருந்தாத, மற்ற தேச அன்னிய மக்கள் நகைக்கவும், நம்மை மிகமிக ஏளனமாய்க் கருதவும் தக்கதாய் இருப்பதால், அவைகளைத் தீவிரமாய் எதிர்த்துப் பிரச்சாரம் செய்து, புரட்சிகரமான மாறுதலை உண்டாக்கி, நாட்டையும், சமுதாயத்தையும் உலகம் மதிக்கும்படிச் செய்ய, ஒவ்வொருவரும் பங்கெடுத்துப் பாடுபட்டு உழைக்கவேண்டும் என்று இம்மாநாடு தீர்மானிக்கிறது.

## நெற்றியில் மதக்குறி இடாதீர்கள்

5. தமிழர்கள் தன்மானம் பெறவும், நம்து பிறவி இழிவை நீக்கிக்கொள்ளும் வகையிலும் தாங்கள் நெற்றியில் மதக்குறிகளை இடுவதை கைவிடவேண்டுமென இம்மாநாடு அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறது.